விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | மலர் : 01 | 13.03.2021 சனிக்கிழமை | இதழ் : 103 | பக்கங்கள் : 16



07

வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி விழா இல்லை



08

இந்திய மாசிக்கருவாடு இலங்கையில் தடை!



10

ஜெனிவாவில் இந்தியா இலங்கைக்கு எதிராக செயல்படக்கூடாது



13

10,000 ஓட்டங்கள் மிதாலி ராஜ் சாதனை

### ஆளும் கூட்டணிக்குள் தீவிரமடையும் உள்முரண்பாடு

# அரசாங்கத்தின் முதுகில் விமல் குத்திவிட்டார் 43 மொட்டு எம்.பிக்கள் பிரதமரிடம் முறையீடு

கொழும்பு, மார்ச் 13

அமைச்சர் விமல் வீரவன்ஸ அரசாங்கத்தின் முதுகில் குத்திவிட்டார் என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் குற்றஞ்சாட்டியுள்ளார்கள்.

இது தொடர்பில் பிரதமரும், பொதுஜனபெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷவிடமும் அவர்கள் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

அரசாங்கத்தின் சில தரப்பினருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனிற்கும் இடையில் இரகசியத் தொடர்புகள் உள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ முன்வைத்துள்ள

02

# ஜெனிவா பிரேரணையை காத்திரமானதாக்குங்கள்!

## பிரிட்டன் பிரதமரை வலியுறுத்தும் எதிர்க்கட்சி



லண்டன், மார்ச் 13

'பிரிட்டன் தலைமையிலான இணைத் தலைமை நாடுகளின் இலங்கை குறித்த பிரேரணை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையின் பரிந்துரைகளை உள்ளடக்கவில்லை என்பதுடன், காத்திரமான தாகவும் இல்லை. எனவே அது தோல்வியான தீர்மானம்' என பிரிட்டனின் லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவர் எட் டெவி எம்.பி. பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சனுக்கு தெரிவித்துள்ளார்.

02

## நேற்று மேலும் 115 பேருக்கு தொற்று

கொழும்பு, மார்ச் 13

நாட்டில் நேற்று மாலை மேலும் 115 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை, 87 ஆயிரத்து 104 ஆக அதிகரித்துள்ளது.

அதனடிப்படையில், கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்து

02

# வடக்கில் 12 பேருக்கு நேற்று தொற்று உறுதி

## வட்டுக்கோட்டைப் பகுதியில் மருத்துவர் ஒருவர் அடையாளம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடக்கு மாகாணத்தில் மேலும் 12 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று வெள்ளிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் வட்டுக்கோட்டையில் மருத்துவர் உள்ளிட்ட 5 பேர் சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கண்டறியப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்

02



## வீடு புகுந்து நாய், புறாக்களை கொலை செய்த அடாவடி குழு

### பருத்தித்துறையில் பாதகச் செயல்

யாழ்ப்பாணம், மார்ச் 13

பருத்தித்துறை சுப்பர்மடத்தில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த கும்பல், வளர்ப்பு நாய் மற்றும் புறாக்களை அடித்துக் கொலை செய்தும் பெறுமதியான பொருள்களை தாக்கியும் அட்டூழியத்தில் ஈடுபட்டுவிட்டு தப்பியுள்ளது.

வீட்டில் உள்ளவர்கள் சிவராத்திரி வழிபாட்டுக்காக நேற்று முன் தினம் இரவு ஆலயத்துக்கு சென்றிருந்த நிலையில் இந்தப் பாதகச் செயலை கும்பல் நடத்தியுள்ளது.

வீட்டில் மூவர் வசிக்கின்றனர். அவர்கள் மூவரும் நேற்று முன் தினம் இரவு ஆலயத்துக்குச் சென்றுள்ளனர். அதிகாலை வீடு திரும்பியபோது அங்கு சேதமாக்கியிருந்தமையை அவதானித்தனர்.

வளர்ப்பு நாய் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளது. புறாக் கூடு சேதப்படுத்தி புறாக்கள் சில கொலை செய்யப்பட்டிருந்தன.

வீட்டினுல் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி வெளியில் எடுத்துவரப்பட்டு

02

## இலங்கைக்குள் நுழைந்தது தென்னாபிரிக்க கொரோனா!

கொழும்பு, மார்ச் 13

தென்னாபிரிக்காவில் பரவும் கொரோனா தொற்றின் ஈ 484 கே என்கிற புதிய வகையான வைரஸ் தொற்றுக்கு இலக்கான இலங்கையர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தனிமைப்படுத்தல் நிலையமொன்றில்

02

## நாமலை தனிமைப்படுத்துக!

கொழும்பு, மார்ச் 13

டுபாயில் இருந்து நாடு திரும்பவுள்ள விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் என தாம் எதிர்பார்ப்பதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெளிநாடு சென்றுள்ள அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, 14 நாட்கள் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தி கொள்வதன்

02

## யாழ்ப்பாணத்தில் புதனன்று கவனவீர்ப்புப் போராட்டம்!

### சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்துமாறு கோரி

யாழ்ப்பாணம், மார்ச் 13

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தக் கோரி மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நீதிக்கான போராட்டத்தில் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் கலந்துகொண்டு போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும் என வடக்கு-கிழக்கு பல்கழலைக்கழகங்களை சேர்ந்த மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தொடர் இடம்பெற்றுவரும் இக்காலப்பகுதியில் தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் நடந்தேறிய இனவழிப்புக்கு நீதி கோரி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மதகுருக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் அமைப்புக்கள் இணைந்து வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தொடர்சி

02

ஈழநாடு

## அரசாங்கத்தின்....

குற்றச்சாட்டுகள் குறித்து சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற குழு வட்டாரங்கள் கடும் அதிருப்பதியும் சீற்றமும் வெளியிட்டுள்ளன.

அமைச்சரின் கருத்தின் நோக்கம் பொதுஜன பெரமுனவை பலவீனப் படுத்துவதே என கட்சியின் பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை காரணமாக அரசாங்கம் பெரும் அழுத்தத்திற்குள்ளாகியுள்ள நிலையில் அமைச்சரின் இந்த கருத்து சரிசெய்யப்படமுடியாத பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று அவசரமாகச் சந்தித்த பொதுஜன பெரமுனவின் 43 எம்.பிக்கள், விமல் வீரவன்ஸவின் உரை அடங்கிய ஒளிநாடா ஒன்றையும் வழங்கினார்கள். அமைச்சர் பதவியிலிருந்து அவர் உடனடியாக நீக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் அவர்கள் முன்வைத்தனர்.

## ஜெனிவா....

அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

‘இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராக காத்திரமான விசாரணை நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என பிரிட்டனில் உள்ள பல தமிழ் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

எனவே இணைக்குழு நாடுகள் உடனடியாக மீண்டும் கூடி பின்வரும் சரத்துக்களை உள்ளடக்கியதாக தீர்மானம் மீண்டும் எழுதப்பட வேண்டும்.

-தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்ற விசாரணைக்கு இலங்கை பாரப்படுத்தப்பட வேண்டும்.

-ஆதாரங்களின் அடிப்படையில் இங்கை மீது காத்திரமான அனைத்துலக விசாரணை பொறிமுறை ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

-ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரைகள் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். குறிப்பாக அனைத்துலக விசாரணைப் பொறிமுறை.

-இலங்கையில் உள்ள பொது அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் பாதுகாப்புக்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.’

என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்குள்....

இவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்த வகையிலான வைரஸ் தற்சமயம் தென்னாபிரிக்க நாட்டில் பரவி வருகின்றதாக கூறப்படுகின்றது.

குறித்த நபர் தன்சானியாவில் இருந்து நாடு திரும்பியுள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது.

## நாமலை....

ஊடாக, ஏனையோருக்கு முனமாதிரியாகச் செயற்பட முடியும்.

இதேவேளை வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புபவர்கள் அனைவரும் ஹோட்டல்கள் அல்லது இராணுவத்தினால் நடத்தப்படும் தனிமைப் படுத்தல் மையங்களில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவது அரசாங்கத்தின் நடைமுறையாகும்.

அந்தவகையில் இவ்வாறான நடைமுறைகளை அரசியல்வாதிகளும் பின்பற்றவேண்டியது அவசியமாகும். மாறாக விதிமுறைகளை மீறி செயற்பட முயற்சித்தால், பொது மக்கள் அரசாங்கத்தின் மீதுள்ள நம்பிக்கையை இழக்க நேரிடும்-என்றார்.

## வீடு புகுந்து....

தாக்கி சேதப்படுத்தப்பட்டிருந்தது. பெறுமதியான பொருள்களும் அடித்துச் சேதப்படுத்தப்பட்டிருந்தன. தொலைக் காட்சி பெட்டி இருந்த ராக்கை தீவைத்து சேதப்படுத்தப்பட்டிருந்தது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப் பட்டது. சம்பவ இடம்பெற்ற வீட்டில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்தப் படுபாதகச் செயலுக்கான பின்னணி தொடர்பில் கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழ்ப்பாணத்தில்....

யான உணவு தவிர்ப்பு போராட்டத்தை பெரும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கை தொடர்பான அறிக்கை எதிர்வரும் 18 ஆம் திகதி அமர்வில் வெளியிடப்படவுள்ள நிலையில் அதற்கான வாக்கெடுப்பு இடம்பெறும் காலப் பகுதியில் தமிழ் மக்களின் கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் முகமாக எதிர்வரும் 17 ஆம் திகதி இந்த மாபெரும் போராட்டம் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டம் நல்லூர் சங் கிலியன் பூங்காவில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகிப் பேரணியாக வந்து தற்போது உணவுதவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றுவரும் போராட்டக் களத்தில் நிறைவடையவுள்ளது.

## வடக்கில்....

வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் 409 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவர்களில் 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப் பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 7 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 பேரும் மன்னார் மாவட்டத்தில் 2 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சங்கானை மருத்துவ அதிகாரி பிரிவில் மருத்துவர் உள்ளிட்ட 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மூன்று பேர் யாழ்ப்பாணம் சிறைச் சாலையிலிருந்து வீடு திரும்பிய நிலையில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள். அவர்களிடம் நேற்று முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கார்கில்ஸ் கட்டடத் தொகுதி பணியாளர் ஒருவருக்கு தொற்று ஏற்பட்ட நிலையில் அவரது துணைவிக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் இருவருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் வெளிநாட்டு விஸாவுக்கு விண்ணப்பித்த மாணவன்.

மற்றையவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட பெண் ஒருவர்.

மல்லாவி மீன் சந்தையில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் இருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் முல்லைத்தீவு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வரம் ஆலய மகா சிவாரத்திரி திருவிழாவுக்கு கடை அமைத்தவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் மன்னார் வீதி சீரமைப்புப் ணியில் ஈடுபடும் பணியாளர் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

# சி.ஐ.டி. வளாகத்தில் பொன்சேகா கண்டனம்!

கொழும்பு, மார்ச் 13

எதிரணி உறுப்பினர்களை அரசியல் ரீதியில் பழிவாங்கும் நடவடிக்கைக்கே தற்போதைய அரசு முன்னுரிமை வழங்கியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அசோக அபேசிங்க எம்.பியுடன் நேற்று முன் தினம் சி.ஐ.டி. வளாகத்துக்கு வருகை தந்திருந்த பொன்சேகா, ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கூறினார்.

“ ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் பலகோணங்களில் கருத்துகள் வெளியிடப்பட்டுவருகின்றன. குறித்த அறிக்கை தொடர்பில் மக்கள் மத்தியில் திருப்தி இல்லை. தாக்குதலின் பின்னணி என்ன, பிரதான சூத்திரதாரி யார் என்பதனை கண்டறிய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே மக்கள் இருக்கின்றனர்.

சமூகவலைத்தளங்களில் கருத்துகள் வெளிவருகின்றன. ஊடகங்களிலும் வெளியாகின்றன. அந்த வகையிலேயே அசோக அபேசிங்கவும் கருத்து வெளியிட்டுள்ளார். எதிரணி அரசியல்வாதிகளை இவ்வாறு இரவு, பகலாக விசாரணைக்கு அழைத்து, அரசியல் இலாபம் தேடுவதற்கு அரசு முயற்சிக்கின்றது.

எதிரணி உறுப்பினர்களை பழி தீர்ப்பதற்கே அரசு முன்னுரிமை வழங்கிவருகின்றது. நாட்டை கட்டியெழுப்ப முன்னுரிமை வழங்கப்படுவதில்லை. நாம் சிறைக்கு செல்வதற்குகூட அஞ்ச மாட்டோம்.“ - என்றார் பொன்சேகா.

# நிலாவெளி கடலில் நீராடிய யாழ். இளைஞர் உயிரிழப்பு!

## மற்றொருவரை காணவில்லை

திருமலை, மார்ச் 13

திருகோணமலை- நிலாவெளி கடலில் நீராடச் சென்ற யாழ். இளைஞர்களில் இருவர் காணாமல் போயிருந்த நிலையில் ஒருவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார் என குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் யாழ்ப் பாணம்-வலிகாமம் தெற்கு பிரதேசத்திலுள்ள குப்பிளான் பகுதியைச் சேர்ந்த நவரஞ்சன் கௌதமன் (வயது-21) ஆவார். மற்றொருவரான சிவச்சந்திரன் ராசா சிந்துஜன் காணாமல்போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கி மோட்டார் சைக்கிளில் நண்பர்கள் சிலர் சென்றனர் எனவும் சமய வழிபாடுகளை முடித்து விட்டு வீட்டுக்குச் செல்வதற்கு முன்னர் நிலாவெளி கடற்கரை பகுதிக்கு நீராடச் சென்றபோது இருவர் கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டதாகவும் இதில் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் மற்றவரை காணாமல் போயுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளதாகவும், விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# யானை தாக்கியதில் வயோதிபர் மரணம்

மன்னார், மார்ச் 13

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேத்தாவாடி மேய்ச்சல் தரவை பகுதியில் நேற்று வெள்ளிக் கிழமை மதியம் மடு மேய்த்துக் கொண்டிருந்த வயோதிபர் ஒருவர் காட்டு யானை தாக்கி பலியாகியுள்ளார்.

யானையின் தாக்குதலுக்கு இலக்காகி பலியானவர் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நருவிலிக் குளம் கிராமத்தைச் சேர்ந்த என்.எம். ஆபிரகாம் (வயது-69) என தெரிய வந்துள்ளது.

தேத்தாவாடி மேய்ச்சல் தரவை பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் மூவர் மாடு மேய்த்துக் கொண்டிருந்த போது திடீர் என அப்பகுதிக்கு வந்த யானை குறித்த மூவரையும் துரத்தியுள்ளது.

இதன்போது இருவர் தப்பிச் சென்ற நிலையில் வயோதிபர் யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக இலுப்பைக் கடவை பொலிஸாருக்கு தகவல் வழங் கப்பட்ட நிலையில் இலுப்பைக்கடவை பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து சடலத்தை மீட்டு மன்னார் வைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.

மேலதிக விசாரனைகளை இலுப்பைக் கடவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நேற்று....

நேற்று 397 பேர் வீடு திரும்பியுள்ள நிலையில் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 83 ஆயிரத்து 958 ஆகப் பதிவாகியுள்ளது. குணமடைந்தவர்களைத் தவிர்த்து 2 ஆயிரத்து 626 பேர், தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கொரோனா தொற்றுக் காரணமாக, இதுவரை 520 பேர் உயிரிழந்துள்ளனர்.

# ஆதி இலங்கையில் இந்து சமயம் சிறப்புரை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 13

‘ஆதி இலங்கையில் இந்து சமயம் - கோயில்களும் சிற்பங்களும்” என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வேந்தரும் வரலாற்று பேராசிரியருமான சி. பத்மநாதன் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

இந்த நிகழ்வு, இன்று இன்று சனிக் கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணப் பொது நூலகம் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடித்து பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
13.03.2021 சனிக்கிழமை
சார்வரி, மாசி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# பிரித்தானியாவிடம் கோரப்படும் நீதி

அம்பிகை என்னும் பெண்மணியினால் இங்கிலாந்தில் மேற்கொள் ளப்பட்டுவரும், உணவு தவிர்ப்பு நடவடிக்கை, 13ஆவது நாளை எட்டி யுள்ளது. அம்பிக்கைக்கு ஆதரவாக வடக்கு, கிழக்கிலும் சிலர் அடையாள உணவு தவிர்ப்பு நவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். ஆனால், இவை தொடர்பில் பிரித்தானிய அரசாங்கம் பெரிதாக கண்டுகொள்ள வில்லை. உலக அதிகார சக்திகளின் அரசியல் போக்கை விளங்கிக்கொண் டவர்களுக்கு இது ஆச்சரியமான ஒன்றுமல்ல. அரசியல்வாதிகளும் இது தொடர்பில் தங்களின் கருத்துக்களை பகிர்ந்துவருகின்றனர். ஆனால், எவருமே அம்பிக்கைக்கு ஆதரவாக உணவு தவிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. அம்பிக்கை சாகும் வரையிலான உண்ணா விரத்தையே மேற்கொண்டுவருகின்றார். அவர் இப்படியே தொடர்ந்தால் அநியாயமாக ஒருவரது உயிர் பிரிந்துவிடலாம். இதனைத் தடுத்து நிறுத்து வதற்கு அனைவரும் முயற்சிக்க வேண்டும். அவரைப் போன்றவர்களின் உணர்வு மதிக்கப்பட வேண்டுமென்பது எந்தளவிற்கு முக்கியமானதோ, அந்தளவிற்கு அவரைப் போன்றவர்களின் இறப்பை தடுத்து நிறுத்த வேண்டியதும் முக்கியமானதாகும்.

தமிழ்நாட்டில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக முத்துக்குமார், செங்கொடி போன்றவர்கள் தங்களின் உயிரை மாய்த்திருக்கின்றனர். அதனால் இந்திய மத்திய அரசின் மட்டத்தில் அது ஒரு விடயமாகவே எடுத்துக்கொள்ளப்படவில்லை. இது, உலகின் பெரிய நாடுகள் அனைத்திற் கும் பொருந்தும். ஏனெனில், ஒருவர் உண்ணாவிரதம் இருந்து இறப்ப தென்பது, குறித்த நபரின் தனிப்பட்ட தீர்மானமாகும். உண்மையில் அது முழுச் சமூகத்தினதும் முடிவல்ல. ஒப்பீட்டடிப்படையில் ஏனைய ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளைவிடவும், உணவுதவிர்ப்பு நடவடிக்கை பெரிய ளவில் பொருட்படுத்தப்படுவதில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் அம்பிகையின் உணவு தவிர்ப்பு நடவடிக்கையையும் பிரித்தானியா அரசு அவதானிக்கும்.

ஐரிஸ் போராட்டத்தின்போதும் இவ்வாறான பல உணவு தவிர்ப்பு நடவடிக்கைகள் பிரித்தானிய அரசிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருந் தது. ஆனால், அவர்கள் இறப்பதையே பிரித்தானியா அனுமதித்தது. எனவே, ஓர் அம்பிக்கை என்னும் தமிழ் பெண் உண்ணாமல் இறந்து போவதால், பிரித்தானிய அரசின் கொள்கை மாறிவிடப் போவதில்லை. அப்படி நடக்கும் என்று எதிர்பார்த்தால் அது தவறாகும். ஏனெனில், பலம்பொருந்திய அரசுகள் இரக்கவுணர்வின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்வதில்லை. அவ்வாறானதொரு நிலைமை உலகில் இருந் தால், பின்னர் எதற்காக யுத்தங்கள் இடம்பெறுகின்றன?

அம்பிக்கையின் உண்ணா நோன்பை கருத்தில்கொண்டு, பிரித் தானியா நீதியை உறுதிப்படுத்த முன்வர வேண்டுமென்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாரும் தெரிவித்திருக் கின்றார். இத்தனைக்கும், கஜேந்திரகுமார் சர்வதேச அரசியல் போக்கு தொடர்பில் ஓரளவு அறிந்தவர்களில் ஒருவர். உண்மையில், தமிழ் தலைவர்கள் என்போர் இதனை ஊக்குவிப்பதற்கு மாறாக, அந்தப் பெண்மணி, மரணிப்பதை தடுத்து நிறுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். அவரது உணர்வை மதித்து, அவருக்கு ஆதரவு தெரிப்பதுடன், அவரை இதிலிருந்து விலகுமாறு கோர வேண்டும். களத்திலிருக்கும் தலைவர் களிடமிருந்து இவ்வாறான கோரிக்கைகள் முன்வைக்கப்படும்போது, அவர் இதிலிருந்து விலகுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதன் மூலம், ஒருவர் மரணிப்பதை தடுத்துநிறுத்த முடியும். உண்மையில், உயிரை மாய்க்கும் உபாயங்கள் ஊக்குவிக்கப்படக்கூடாது. ஏற்கனவே பல்லாயிரணக்கணக்கான உயிர்களை மாய்த்தும், எதனையும் அடைய முடியாமல்போன சமூகமான தமிழ் சமூகம், இறப்பதை தவிர்த்து,

புத்திசாதுர்யம், தந்திரோபாயம் போன்ற வழிமுறைகளில் நகர்வது தொடர்பில் சிந்திக்க முன்வரவேண்டும். யதார்த்தங்களை உணராமல் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் இறுதியில் தமிழ் சமூகத்திற்கான இழப்புக்களாக பதிவு செய்யப்படுமேயன்றி, அது ஒருபோதும் வெற்றியை எட்டித்தொடப் பயன்படாது.

# ஜெனிவாவில் இந்தியா!

- அலசுவது இராஜதந்திரி -

*ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைமீது பிரித்தானியாவினால் கொண்டுவரப்படவுள்ள பிரேரணை குறித்தே தற்போது கூடுதல் கவனம் செலுத் தப்படுவதாக இருக்கின்றது. இந்திய தூதுவர் கோபால் பாக்லே ஜெனிவாவில் இலங்கை மீதான பிரேரணை குறித்து கருத்து வெளி யிட்டபோது, இந்தியா ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் இடம்பெறுகின்ற நடவடிக்கைகளை மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாக தெரிவித்துள்ளார்.*

*இதேவேளை, பிரித்தானியாவினால் இத்தடவை கொண்டுவரப்படவுள்ள இலங்கைமீதான பிரேரணை எத்தகைய கோணத்தில் இருக்கும் என்பதே இலங்கை விவகாரத்தில் கரிசனை காட்டுகின்ற அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.*

*பிரித்தானியா அதன் காலனித்துவ ஆட்சியின்போது தென்னாசியாவில் தனது ஆளுமையை நிலைநாட்டிய நாடுகளாகவே இந்தியா, இலங்கை ஆகியவை விளங்குகின்றன. பிரித்தனியா வெற்றிகரமாக தன்னைவிடப் பெரிதான நாடுகளை அடிபணியவைப்பதில், அரசியல் ரீதியாக அந்நாட்டில் பிரித்தாளும் தந்திரத்தை கையாண்டிருந்தது.*

**சொந்த நலன்கள்**

*மேற்கத்தைய நாடுகளான பிரித்தானியா, அமெரிக்கா போன்ற வல்லரசுகள் எப்போதுமே தமது சொந்த நலன்களை முன்னிலைப்படுத்துவதிலேயே முனைப்பானவை. இவ்வகையில் தற்போதைய சர்வதேச அரசியல் சூழலில் ஆசியாவில் குறிப்பாக, தென்னாசியாவில் சீனாவின் கை ஓங்குவதை அமெரிக்காவோ அல்லது பிரித்தானியாவோ ஏற்றுக்கொள்வதாக இல்லை. இதன்காரணமாக சீனாவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான முரண்பாடுகளை ஆசியாவில் தமது நலன்களை பாதுகாப்பதில் அமெரிக்காவும் பிரிட்டனும் நன்கு பயன்படுத்துவதையே அவதானிக்க முடியும்.*

*தென்னாசியாவில் தனது ஆளுமையை நிலைநாட்ட சீனாவும், இந்தியாவும் இலங்கையில் வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்ததும் போட்டி போட்டுக்கொண்டு களமிறங்கின.*

**சீன ஆதிக்கம்**

*ஆனால், இந்தியாவைப்போலன்றி அசுர பொருளாதார பலத்துடன் காணப்படும் சீனா, இலங்கையில் விரிவான முறையில் தனது செல்வாக்கை நிலைநிறுத்தியுள்ளது.*

*இதன் காரணமாக இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை பலவீனப்படுத்த ஜெனிவாவில் இலங்கைமீதான பிரேரணையை பிரித்தானியா, இந்தியா ஆகியவை தமக்கொரு பிடியாகக்கூட வைத்திருக்க முடியும்.*

*இதன்காரணமாகவே சீனா மீதான போட்டித்தன்மை காரணமாக இலங்கை விவகாரத்தில் இந்தியா இலங்கைக்கு எதிராக செயல்படக்கூடாது என்று பாராளுமன்ற உறுப்பினரும் லங்கா சமசமாஜ கட்சித் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.*

*பேராசிரியர் திஸ்ஸ விதாரண இந்தியா குறித்த தனது அபிப்பிராயத்தை வெளியிடலாம். ஆனால், இந்தியாவைவிட ஆசியாவில் சீனாவின் செல்வாக்கு குறித்து அதிகம் அவதானத்தோடு இருப்பவையாகவே பிரிட்டனும் அமெரிக்காவும் விளங்குகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கு தமிழர் பிரச்னையை தீர்ப்பதில் இந்தியாவின் பங்களிப்பு அபரிமிதமானது எனக்குறிப்பிட்டால் அது மிகையாகாது.*

**13ஆவது திருத்தச் சட்டம்**


*ஏனெனில், 1987ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை அரசியல் அமைப்பில் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டம் வடக்கு-கிழக்கு பிரச்னையில் முக்கிய பங்குவகித்தது. ஆனால், 13ஆவது திருத்தச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட காலகட்டத்தில் உரிய வகையில் அதனை அமுல்படுத்த தவறியமையே இன்று 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' என்ற வகையில், 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கமே ஒரு நிரந்தரத்தீர்வுக்கு வழியமைக்கும் என்ற நிலைப்பாட்டை இலங்கையின் தமிழ் அரசியல் மேற்கொள்வதில் அவதானிக்க முடிகின்றது.*

*இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேகூட இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலமே இலங்கையில் தமிழர்களது அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதோடு, நல்லிணக்கத்தை பலப்படுத்த முடியுமென்றும் ஓரிருதினங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தார்.*

*இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னைகளில் கரிசனை காட்டுகின்ற ஏனைய சர்வதேச நாடுகளைவிட, இந்தியா அதிகளவு அக்கறையை வெளிப்படுத்தவேண்டிய ஒரு நாடாக இருக்கின்றது. ஏனெனில், இந்தியா தனது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியையும் இலங்கைவந்த ஏராளமான இந்திய அமைதிப்படை வீரர்களையும் இலங்கைப் பிரச்னையை தீர்த்துவைப்பதற்காக காவு கொடுத்துள்ளது. இவ்வகையில், இந்தியா இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரச்னைகளைப் பொறுத்தவரை ஒரு தவிர்க்கமுடியாத பிராந்திய அரசியல் சக்தியாகவே இருக்கின்றது.*

*இந்நிலையில், இத்தடவை பிரித்தானியாவினால் இலங்கைமீது கொண்டுவரப்படவுள்ள பிரேரணை தொடர்பில் இந்தியா அதன் சொந்த நலன்களை கருத்தில் கொள்வதைவிட, இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வுகளை எட்டக்கூடிய ஒரு பொறிமுறைக்கு வழியமைப்பதே இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு விமோசனத்தை வழங்குவதாக அமைந்திருக்கும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 13 சனிக்கிழமை
சார்வரி வருடம் - மாசி - 29
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : அமாவாசை




## 13.03.2021

**மேடம்**
மத்தியஸ்தம் செய்து பிரிந்தவர்களை ஒன்று சேர்ப்பீர்கள். விடாமுயற்சியால் குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பல நாள் வராத தொகை கைக்கு வரும். புது நட்பு மலரும்

**இடபம்**
நல்ல விஷயங்கள் முயற்சி காரணமாக முடியும். சக பணியாளர்களிடம் சற்று நிதானமாக நடந்து கொள்ளுங்கள். மனசாட்சிப் படி செயல்பட்டு நிம்மதி காண்பீர்கள்.

**மிதுனம்**
பணியாளர்களுக்கு சாதனைகளுக்கான வாய்ப்புகள் வரும். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வீர்கள். நண்பர்களுடன் பழைய நினைவுகளை பேசி மகிழ்வீர்கள்.

**கடகம்**
பண விஷயத்தில் கடந்த சில நாட்கள் இருந்த பயம் நீங்கும். ஈகோ பிரச்னை வேண்டாம். பிறருடன் விவாதம் செய்வதை தவிர்க்கவும். தவறுகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள்.

**சிம்மம்**
சில உறவினர்களை நீங்கள் தர்மசங்கடத்திற்கு ஆளாக்குவீர்கள்.விலகியிருந்த நண்பர்கள் உங்கள் வேண்டுகோளால் இணைவர். உடன் பணி புரிவோரிடம் கனிவாகப் பேசி நட்பாவீர்கள்.

**கன்னி**
பொழுதுபோக்குகளில் மனம் செல்லும். கவலை தீரும். வித்தியாசமான செயல்களால் மற்றவருக்கு மகிழ்ச்சி அளிப்பீர்கள். திடீர் சம்பவங்களை எதிர் கொள்ள வேண்டி வரும்.

**துலாம்**
முன்பிருந்த கவலைகள் தீரும். முயற்சி வெல்லும். மனம் நிறையும். தலைமையின் ஆதரவு பெற மெனக்கெடுவீர்கள். பணியாளரின் கோபம் தீரும். பிள்ளைகளின் செயல் மகிழ்ச்சி தரும்.

**விருட்சிகம்**
புத்திசாலித்தனம் மூலம் சிரமத்திலிருந்து மீளுவீர்கள். நீண்ட நாளாக இருந்த கவலை ஒன்று முடிவுக்கு வரும். மகிழ்ச்சியும், மன நிறைவும் ஏற்படும். முந்தைய படபடப்பு தீரும்.

**தனுசு**
மன திருப்தியுடன் பணியாற்றுவீர்கள். குடும்ப சண்டை முடியும். வாழ்க்கைத்துணையுடன் உல்லாசப் பயணம் செல்வீர்கள். எதிலும் முனைப்புடன் இருப்பதால் வெற்றி கிடைக்கும்.

**மகரம்**
மேலதிகாரி பாராட்டுவார். புது நபர் அறிமுகம் உண்டு. பிறரிடம் பேசும்போது கடுமையான சொற்களைப் பயன்படுத்தாதீர்கள். சவால்களை எதிர்கொண்டு எளிதாக வெற்றியடைவீர்கள்.

**கும்பம்**
விரும்பிய ஒன்று நிறைவேறும். மற்றவர் குறை தீர்ப்பீர்கள். உங்கள் மீது பிறர் வைத்திருந்த மதிப்பு கூடும்படியாக நடப்பீர்கள். ரசனைக்குரிய விசயங்கள் உங்களை மகிழ்விக்கும்.

**மீனம்**
நிறைவேறாத விஷயம் ஒன்றிற்கான முயற்சி தொடரும். நல்லதும் மற்றதும் கலந்து நிகழும். தைரியம் தேவை. மற்றவர் மதிப்பர். சிறு பயணத்தால் நன்மை ஒன்று இருக்கும்.

### தமிழக சட்டமன்ற தேர்தல்

# தி.மு.கவின் வேட்பாளர் பட்டியல் வெளியானது

### உதயநிதி ஸ்டாலினும் போட்டி



சென்னை, மார்ச் 13

தி.மு.கவின் வேட்பாளர் பட்டியலை அக்கட்சியின் தலைவர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ளார்.

கொளத்தூர் தொகுதியில் மு.க. ஸ்டாலினும் திருவல்லிக்கேணி தொகுதியில் உதயநிதி ஸ்டாலினும் போட்டியிடுகின்றனர்.

சென்னையில் உள்ள தி.மு.கவின் தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த மு.க. ஸ்டாலின் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டார்.

இந்தத் தேர்தலில் தி.மு.க. 173 இடங்களில் போட்டியிடுகிறது. கூட்டணிக் கட்சிகளில் சில கட்சிகளும் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுவதால் ஒட்டுமொத்தமாக 187 இடங்களில் உதயசூரியன் சின்னத்தில் தி.மு.கவும் கூட்டணியினரும் களமிறங்குவார்கள் என மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

தி.மு.கவின் சார்பில் போட்டியிடும் முக்கியமான வேட்பாளர்கள் விவரம் வருமாறு:-

நாகர்கோவில் தொகுதியின் என். சுரேஷ் ராஜன், ஆலங்குளம் தொகுதியில் பூங்கோதை ஆலடி அருணா, திருச்செந்தூர் தொகுதியில் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், தூத்துக்குடியில் கீதா ஜீவன், முதுகுளத்தூர் தொகுதியில் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், திருச்சுழி தொகுதியில் தங்கம் தென்னரசு, அருப்புக்கோட்டை தொகுதியில் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன், போடி நாயக்கனூரில் தங்க தமிழ்ச்செல்வன், மதுரை மத்தியத் தொகுதியில் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

திருப்பத்தூர் தொகுதியில் கே.ஆர். பெரியகருப்பன், திருவாரூர் தொகுதியில் பூண்டி கலைவாணன், மன்னார்குடி தொகுதியில் டி.ஆர்.பி. ராஜா, குறிஞ்சிப்பாடியில் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், குன்னம் தொகுதியில் எஸ்.எஸ். சிவசங்கர், திருவெறும்பூரில் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திருச்சி மேற்கில் கே.என். நேரு, கரூர் தொகுதியில் வி. செந்தில் பாலாஜி, தொண்டாமுத்தூரில் கார்த்திகேய சிவசேனாபதி, மொடக்குறிச்சியில் சுப்புலட்சுமி ஜெகதீசன், எடப்பாடி தொகுதியில் த. சம்பத்குமார், திருக்கோவிலூரில் க. பொன்முடி, திருவண்ணாமலையில் எ.வ. வேலு, காட்பாடி தொகுதியில் துரைமுருகன், ஆலந்தூர் தா.மோ. அன்பரசன், சைதாப்பேட்டை மா. சுப்பிரமணியன், ஆயிரம்விளக்கு தொகுதியில் டாக்டர் நா. எழிலன், திருவல்லிக்கேணி தொகுதியில் உதயநிதி ஸ்டாலின், துறைமுக் தொகுதியில் சேகர் பாபு, கொளத்தூர் தொகுதியில் மு.க. ஸ்டாலினும் போட்டியிடுகின்றனர்.

எடப்பாடி தொகுதியில் தொகுதியில் முதலமைச்சர் கே. பழனிசாமி போட்டியிடும் நிலையில் அவரை எதிர்த்து ந. சம்பத்குமார் நிறுத்தப்பட்டிருக்கிறார். அதேபோல, போடி நாயக்கனூரில் போட்டியிடும் துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வத்தை எதிர்த்து அ.ம.மு.கவிலிருந்து தி.மு.கவுக்கு வந்த தங்க தமிழ்ச் செல்வன்நிறுத்தப்பட்டிருக்கிறார். கரூரில் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கரை எதிர்த்து முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி நிறுத்தப்பட்டிருக்கிறார். தொண்டாமுத்தூர்தொகுதியில் அமைச்சர் எஸ்.பி. வேலுமணியை எதிர்த்து கார்த்திகேய சிவசேனாதிபதி போட்டியிடுகிறார்.

உதயநிதி ஸ்டாலின் இந்தத் தேர்தலில் போட்டியிடமாட்டார் எனக் கூறப்பட்ட நிலையில், அவர் திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, மு. கருணாநிதியின் மருத்துவராக இருந்த டாக்டர் நா. எழிலன் ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிடுகிறார். எதிர்பார்த்தபடியே கொளத்தூர் தொகுதியில் போட்டியிடுகிறார் மு.க. ஸ்டாலின்.

## வேட்புமனுத் தாக்கல் நேற்று ஆரம்பமானது

சென்னை, மார்ச் 13

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வேட்பு மனுத்தாக்கல் நேற்று வெள் ளிக்கிழமை ஆரம்பமானது. முற்பகல் 11 மணி முதல் மாலை 3 மணி வரை வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய லாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை 20 ஆம் திகதி நடைபெறுகிறது. வேட்பு மனுக்களை திரும்பப்பெற 22 ஆம் திகதி கடைசி நாளாகும். அன்று மாலையே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியி டப்படும்.

வேட்புமனு விண்ணப்பங்களை தேர்தல் ஆணையத்தின் இணையத் தளம் மூலமாகவும் பதிவிறக்கம் செய்யலாம் என தலைமைத்தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு கூறியுள் ளார். தமிழ்நாட்டில் உள்ள 234 சட்ட மன்ற தொகுதிகளுக்கும் புதுச்சேரியில் உள்ள 30 சட்டமன்ற தொகுதிகளுக்கும் ஏப்ரல் 6ஆம் திகதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற வுள்ளது. அத்துடன் காலியாக உள்ள கன்னியாகுமரி பாராளுமன்ற தொகுதிக்கும் இடைத்தேர்தல் நடத்தப்படுகிறது. தேர்தலுக்கு இன்னும் குறைந்த நாட்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் கூட்டணியை இறுதி செய்து தொகுதி பங்கீட்டையும் இறுதி செய்யும் நிலையில் உள்ளன.



## பா.ஜ.கவில் இணைந்த செந்தில்!

சென்னை, மார்ச் 13

மக்களுக்கு ஊழலற்ற ஆட்சி உள்ளிட்ட எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதற்காக பா.ஜ.கவில் இணைந்திருப்பதாக நடிகர் செந்தில் கூறியுள்ளார்.


80, 90 களில் தவிர்க்க முடியாத முன்னணி நகைச்சுவை நடிகராக இருந்தவர் செந்தில். அ.தி.மு.கவின் நட்சத்திர பேச்சாளராக வலம் வந்த இவர், ஜெயலலிதாவின் மறைவை அடுத்து டிடிவி தினகரனின் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தில் அமைப்புச் செயலாளராக பணியாற்றி வந்தார்.

இந்நிலையில் நேற்று முன் தினம் தன்னை பாஜக கட்சியில் இணைத்துக் கொண்டார். சென்னை பா.ஜ.க தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர், “ஊழலற்ற ஆட்சி என்பது பா.ஜ.கவின் வழக்கம் என்பதால் தான் அந்தக் கட்சியில் இணைந்துள்ளேன்.

மக்களுக்கு ஊழலற்ற ஆட்சி உள்ளிட்ட எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதற்காக பா.ஜ.கவில் இணைந்திருக்கிறேன். நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு தமிழகம் முழுவதும் பிரசாரம் செய்வேன். தலைமை கூறினால் அ.தி.மு.க வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வேன்”எனத் தெரிவித்துள்ளார்.

# இலங்கை தேசியக்கொடி படத்துடன் கால் மிதிகள்!

## தயாரித்தது சீன நிறுவனமாம்




கொழும்பு, மார்ச் 13

உலகின் முன்னணி இணையவழி சில்லறை விற்பனையாளரான அமேசன் நிறுவனத்தின் விற்பனைப் பட்டியலில், இலங்கைக் கொடியின் படம் பொறிக்கப்பட்ட கால் மிதிப்புக்கள் உள்ளிட்ட பல தயாரிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

அமேசன் இணையத்தளத்தின் விளம்பரத்தின்படி இதன் விலை 19 அமெரிக்க டொலராகும். இலங்கைக்கு அனுப்ப 9.20 அமெரிக்க டொலர் கப்பல் கட்டணம் வசூலிக்கிறது.

அமேசன் நிறுவனம், சிங்கப்பூரிலிருந்து உலகளவில் விரிப்புகளை விநியோகிக்கிறது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சாந்த திஸாநாயக்க, இது இலங்கை சந்தையில் விற்பனைக்கு வந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

இந்த கால் விரிப்புக்களை சீன நிறுவனம் ஒன்றே தயாரித்துள்ளது.

இந்த படங்கள் சிங்கள சமூக ஊடக பயனர்களால் கொந்தளிப்பாக பகிரப்பட்டு வருகிறது.



# ஐ.தே.கவின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் சஜித் பக்கம்!

கொழும்பு, மார்ச் 13

நுவரெலியா நகரசபை மற்றும் பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அறுவர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர்.

அவர்கள் சஜித் பிரேமதாஸவை நேரில் சந்தித்து தமது ஆதரவை தெரிவித்தனர்.

ஐ.தே.கவின் நுவரெலியா நகரசபை உறுப்பினர்களான விஜயகுமார், மஹிந்த சில்வா வும், பிரதேச சபை உறுப்பினர்களான சரத் குமார், இந்தபால, சாந்தனி ஹெட்டியாராச்சி ஆகியோரே இவ்வாறு கட்சி தாவியுள்ளனர்.

# 2024இல் பஸில்தான் ஜனாதிபதி வேட்பாளர்!

## அனுரகுமார திஸநாயக்க கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 13

**2024 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிடமாட்டார் எனவும், பஸில் ராஜபக்ஷவே களமிறங்கக்கூடும் என்றும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தகவல் வெளியிட்டுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பஸில் ராஜபக்ஷவையும், பி.பி. ஜயசுந்தரவையும் வெளியேற்ற வேண்டும் என ஆளுங் கட்சியிலுள்ள குழுவொன்று போராடுகின்றது. மறுபுறத்தில் ஜனாதிபதி தான் "பாஸ்" என சான்றிதழ் வழங்கி வருகின்றார். பொருளாதார நெருக்கடி காரணமாகவே இவ்வாறெல்லாம் நடக்கின்றது.

விமல் வீரவன்ஸ உள்ளிட்ட குழுவினர் அண்மையில் ஜனாதிபதியை சந்திக்கச் சென்றுள்ளனர். மொட்டுக் கட்சியின் தலைவராக மஹிந்த இருக்கட்டும், அக்கட்சி தலைமையில் அமையும் கூட்டணியில் தலைமைப் பதவியை நீங்கள் பொறுப்பெடுங்கள் என இதன் போது கோரிக்கை முன்வைத்துள்ளனர். இந்த மாற்றம் நடந்தால் நாட்டில் பொருளாதார பிரச்சனைக்கு தீர்வு கிடைக்குமா, இல்லை. மாறாக விமல் தரப்பின் பிரச்சனைதான் தீரும்.

கோட்டாபய ராஜபக்ஷ விடம் இவ்வாறு கோரிக்கை முன்வைக்கப்பட்ட பின்னர், தன்னால் அரசியல் செய்ய முடியாது எனவும், அடுத்த தேர்தலில்தான் போட்டியிடமாட்டார் எனவும் கோட்டாபய பதிலளித்துள்ளளார்.

தமிழ், முஸ்லிம் வாக்குகளை பெறக்கூடிய வேட்பாளரையே தயார் செய்யவேண்டும் எனவும் சந்திப்பில் கூறப்பட்டுள்ளது. அந்த வேட்பாளர் யார்? பஸில் என்பவரே அவர் - என்றார் அநுர.

# காங்கேசன்துறை - காரைக்கால் படகுச்சேவை விரைவில் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 13

யாழ்ப்பாணம் காங்கேசன் துறையில் இருந்து புதுச்சேரி அருகிலுள்ள காரைக்கால் இடையேயான படகுச் சேவையை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை - காரைக்கால் படகுச் சேவையை ஆரம்பிப்பது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் இறுதி செய்யப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இணைப்பை மேம்படுத்துவதில் இந்தியா ஆர்வமாக உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், பல நூற்றாண்டுகள் பழமையான படகுச் சேவைகளை மீண்டும் ஆரம்பித்து சுற்றுலா மற்றும் சிறிய அளவிலான வர்த்தகத்தை இரு வழிகளிலும் எளிதாக்குவதற்கும், இரு நாட்டு மக்கள் தொடர்புகளை வலுப்படுத்துவதற்கும் உறுதியான வழியாகவே இந்தத் திட்டங்கள் அமைந்துள்ளதாக அவர் கூறினார். இந்தச் சேவைகளை ஆரம்பிப்பதன் மூலம் சட்டவிரோத வர்த்தகத்தைத் தடுக்க முடியும் என்றும்



சுட்டிக்காட்டினார்.

இதனிடையே, காங்கேசன் துறை துறைமுகத்தை இந்தியாவின் 45.27 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை ஒப்பந்தம் செய்துள்ளது. அத்துடன் இந்தியாவுடனான திட்டமிடப்பட்ட விமானங்களுக்காக இலங்கை தனது வான்வெளியை மீண்டும் திறக்கும்போது, பலாலிக்கான விமான சேவையை இந்தியா மீண்டும் ஆரம்பிக்கும் எனவும் தூதுவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கொழும்பு - தூத்துக்குடி இடையில் ஒரு இணைப்புக்கான வாய்ப்பும் உள்ளதாக இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

(அ)

# தேவையற்ற விடயங்களில் அவதானம் செலுத்தாதீர்!

## அரசை எச்சரிக்கிறார் ரத்ன தேரர்

கொழும்பு, மார்ச் 13

அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து தேவையற்ற விடயங்களில் அவதானம் செலுத்தினால் அவர்களினாலேயே புறக்கணிக்கப்படுவீர்கள் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

களனிப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே பலமான தலைமைத்தவத்தின் கீழ் அரசாங்கத்தை தோற்றுவிக்கவேண்டும் என தீர்மானித்து, நாட்டு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை அமைத்தனர். பௌத்த- சிங்கள மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறியுள்ளதா என்பது தற்போது கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தை தேர்தல் பிரசாரமாக்கி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், குண்டுத்தாக்குதல் சம்பவத்திற்கும் குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என குறிப்பிடுவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கும் நம்பிக்கை துரோகமாகவே கருதப்படும்.

இஸ்லாமிய அடிப்படைவாதம் தோற்றம் பெற பொதுபல சேனா அமைப்பு காரணம். ஆகையால் அந்த அமைப்பை தடை செய்ய வேண்டும் என ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் தவறானதாகும்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள், கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தால் பௌத்த அமைப்புக்கள் பொதுத் தன்மையில் எதிர்ப்பை வெளிப்படுத்த நேரிட்டிருக்காது.

பொதுபல சேனா அமைப்பின் காரணமாகவே மறைமுகமாக செயற்பட்ட இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் பல விடயங்கள் பகிரங்கப்படுத்தப்பட்டன. ஆகவே, பௌத்த அமைப்புக்கள் ஒருபோதும் பிற இனங்கள் மீது அடிப்படைவாதத்தையும் வன்முறைகளையும் கட்டவிழ்த்து விடவில்லை.

பொதுபல சேனா அமைப்பை தடை செய்ய பௌத்த - சிங்கள மக்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள். தேர்தல் காலத்தில் நாட்டு மக்க ளுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் முறையாக செயற்படுத்தவேண்டும்.

ஒரு நாடு ஒரு சட்டம் என்ற கொள்கை வெறும் வாய்சொல்லாக மாத்திரம் காணப்படுகிறது. தேவையற்ற விடயங்களுக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கினால் நாட்டு மக்கள் அரசாங்கத்தை முழுமையாக புறக்கணிப்பார்கள்-என்றார்.

(அ)

# 10 வருடத்தில் இலங்கையில் மிகச்சிறிய இனம் தமிழரே!

## சமுதாய மருத்துவ நிபுணர் முரளி சுட்டிக்காட்டு



**கிளிநொச்சி, மார்ச் 13**

**இலங்கையில் 2031 ஆம் ஆண்டளவில் மிகச்சிறிய சிறுபான்மை இனமாக தமிழர்கள் காணப்படுவார்கள் என சமுதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தமிழர்களின் எதிர்காலம் ஒரு குடித்தொகையியல் நோக்கு எனும் நிகழ்வில் பிரதம வளவாளராக கலந்துகொண்டு

கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் சனத்தொகை பெருக்க வீதம் வருடா வருடம் குறைவடைந்தே செல்கிறது. யுத்தம், நலிவுற்ற பொருளாதாரம், புலம் பெயர்வு, காலம் பிந்திய திருமணம், குடும்ப கட்டமைப்பு சிதைவுகள், நாகரிகம், கருத்தடைகள், குடும்பக் கட்டுப்பாடுகள் என பல்வேறு காரணிகளை கூறிக்கொண்டே போகலாம். இந்த காரணிகளால் தமிழர்களின் சனத்தொகை குறைவடைந்து செல்கின்றமையை நாம் கண்முன்னே காண்கின்றோம்.

வடக்கு-கிழக்கில் தமிழ் பாடசாலைகளில் தரம் ஒன்றில் இணைந்துகொள்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் குறைவடைந்து செல்கின்றமையை புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இது எமது இனத்துக்கு ஆபத்தானது. ஆரம்பத்தில் யாழ் தேர்தல் தொகுதியில் 11 பாராளுமன்ற பிரதிநிதிகள் இருந்தார்கள். ஆனால் தற்போது 7 பாராளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். தமிழ் மக்களின் சனத்தொகை குறைவடைந்ததன் விளைவே

இது. தமிழ் மக்களின் அரசியல் தலைமைகள் இது தொடர்பில் சிந்தித்து செயற்படுவதாக இல்லை. தமிழ்த் தலைமைகள் அரசியல் உரிமைப் பிரச்னைக்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தை இப்படியாக ஓர் இனத்தின் ஆபத்தான பிரச்னைகளுக்கு

கொடுப்பதில்லை. தமிழ் மக்களின் சனத் தொகையானது இப்படியே சென்றால் வென்றெடுக்கும் உரிமைகளை அனுபவிக்க மக்கள் இருப்பார்களா என்ற கேள்வியே எழுகிறது.

எனவே, தமிழினத்தின் சனத்தொகை அதிகரிப்பை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தவறின் 2031 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது சிறுபான்மை இனமாக தமிழ் மக்கள் காணப்படுவார்கள்-என்றார்.

கிளிநொச்சி மாவட்ட உளமருத்துவர் ம. ஜெயராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துப்படுத்துகின்ற பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



# விரைவில் அதிரடிக்கு தயாராகும் ரணில்!

கொழும்பு, மார்ச் 13

பெரியதொரு அரசியல் கூட்டணியை கட்டியெழுப்பும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார்.

இதற்காக முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் உதவியையும் அவர் கோரியுள்ளார். இதனை ஏற்று மங்களவும் இம்முயற்சியில் களமிறங்கியுள்ளார்.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, ரணில் விக்கிரமசிங்கவை தனது மகன் சகிதம் கடந்த வாரம் சந்தித்து சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இதன்படி ரணிலின் அதிரடி அரசியல் ஆட்டம் மீண்டும் விரைவில் ஆரம்பமாகும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

(அ)

# கீரிமலை நகுலேஸ்வரத்தில் சிறப்பான சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், மார்ச் 13

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாகிய கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி உற்சவம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

லிங்கோற்பவருக்கு விஷேட பூசை வழிபாடுகள், விசேட அபிசேக ஆராதனைகள் இடம்பெற்று சிவராத்திரி பூசை வழிபாடுகள் சிறப்பாக நடந்தன. மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சிவராத்திரி பூசை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன.

# நீராட சென்ற இருவர் நீரில் மூழ்கி மாயம்!

கொழும்பு, மார்ச் 13

மஹவெல பொலிஸ் பிரிவின் ஹன்கந்த மின் ஆலைக்கு அருகில் கங்கையில் நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளனர்.

நேற்று முன் தினம் காலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

மஹவெல பொலிஸிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸ் அதிகாரிகள், கடற்படையினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து காணாமற்போன நபர்களை தேடி வருகின்றனர்.

16 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவரும் மற்றும் 26 வயதுடைய தலுபொதகம பிரதேசத்தை சேர்ந்த நபரொருவருமே இவ்வாறு காணாமற் போயுள்ளனர்.

மஹவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலை குறைப்பு

கொழும்பு, மார்ச் 13

சதொச விற்பனை நிலையங் கள் பெரிய வெங்காயம், சிவப்பு பச்சையரிசி மற்றும் உள்நாட்டு கிழங்கு உள்ளிட்ட சில பொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, சந்தையில் 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 195 ரூபாவுக்கும், உள்நாட்டு கிழங்கு 150 ரூபாவுக் கும், சிவப்பு பச்சையரிசி 89 ரூபாவுக்கும் சதொச விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விலைக்குறைப்பு நடவடிக்கையானது நேற்று முதல் அமுலுக்கு வரும் வகை யில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், கடந்த பெப்ர வரி மாதம் கொண்டுவரப்பட்ட 27 பொருட்களுக்கான விலைக் குறைப்பானது அதே நிலையில் கொள்ளப்படுமெனவும் வர்த் தக அமைச்சு அறிவித்துள்ளது.

ஈழநாடு
Online
சம்பவங்கள், செய்திகள் உடனுக்குடன் அறிந்துகொள்ள...
www.eelanadu.lk

# தமிழ் மக்கள் தொடர்ந்துமே இராணுவ ஆக்கிரமிப்புக்குள்

## சிறிதரன் எம்.பி. விசனம்

கிளிநொச்சி, மார்ச் 13

தமிழர்கள் தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 22ஆம் திகதி ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் இம்மாதம் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தமிழர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பில் பன்னாட்டுத் தளங்களில் தமிழர் இயக்கத்துடன் இணைந்து செயல்படும் ஐ.நாவின் அங்கீகாரம் பெற்ற அமைப்புகளின் ஊடாக இக் கூட்டத்தொடரில் கலந்துகொள்ளும் தமிழர் உரிமைச் செயல்பாட்டாளர்கள்கொரோனா தொற்று காரணமாக இணைய வழி ஊடாகக் கூட்டத்தொடரில் இணைந்து கொண்டு கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தினால் தமிழர்கள் படுகொலைசெய்யப்பட்டனர் என ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உயர் ஆணையாளரும் 10 சிறப்பு பொறிமுறை அதிகாரமுள்ளவர்களும் தங்களது அறிக்கையில் சுட்டிக்காட்டியதற்கு நன்றி தெரிவிக்கிறோம்.

ஆனால், அவர்கள் தமிழர்கள் கட்டமைக்கப்பட்ட இன வழிப்பால் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று கூறுவதற்கு மறந்துவிட்டனர்.

இலங்கையில் உள்ள வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் இன அழிப்புசெய்யப்பட்டு 12 ஆண்டுகள் முடிந்து இன்னும் காலநீடிப்பு தர இந்தப் பேரவை விரும்புகிறது.

தமிழர்கள் தொடர்ந்து இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இராணுவ அடக்குமுறைக்கு கீழ் தங்களது பண்பாட்டு, சமூக, பொருளாதார, அரசியல், குடிமை உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருக்கின்ற னர்.

கீழ்காணும் பரிந்துரைகளை வைத்து இலங்கைமீது தீர்மானம் கொண்டுவரும் முக்கிய குழுவும் மனித உரிமை உறுப்பினர்களும் உறுதியான தீர்மானத்தை கொண்டுவர கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும். சுதந்திரமான சர்வதேச விசாரணை பொறிமுறை நடத்தவேண்டும். இலங்கைக்கான சிறப்பு ஆய்வாளரை நியமிக்கவேண்டும்.

தமிழர்களின் தன் நிர்ணய உரிமையையும் அவர்களின் எதிர்பார்ப்புகளையும் அறிந்து உறுதி செய்ய ஐ.நாவின் மேற்பார்வையில் வாக்கெடுப்பு நடத்தவேண்டும் - என்றார்.

# சட்டவிரோத மதுபானம் தயாரித்த நால்வர் கைது!

கொழும்பு, மார்ச் 13

பாணந்துறை - பொல்கொட பகுதியில் பாணந்துறை மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சட்டவிரோதமாக மதுபானத் தயாரிப்பில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்

பாணந்துறை மத்திய ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, சட்டவிரோதமாக மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது 8 எரிவாயு சிலிண்டர்களும் , 45 மதுபான போத்தல்களும் , 59 கோடாக்களும் (பீப்பாய்களும் ) கைப்பற்றப்பட்டுள்ளன.



## ஹெரோயினுடன் பெண் ஒருவர் காலியில் கைது

கொழும்பு, மார்ச் 13

20 கிராம் ஹெரோயின் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் 60 வயதுப் பெண் ஒருவர் காலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் காலி - ரத்கம பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல்களுக்கமைய மேற்கொள் ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போதே இவர் கைது செய்யப்பட்டார்.

# இந்தியா-இலங்கை இடையேயான நட்பில் அபிவிருத்தி முக்கிய இடமாக உள்ளது!

### மடுவில் கூறினார் கோபால் பாக்லே



மன்னார், மார்ச் 13

**இந்தியாவுக்கும் இலங்கைக்குமான நட்பில் அபிவிருத்தி முக்கியமான இடமாக உள்ளது. எமது திட்டங்கள் நேரடியாக மக்களைச் சென்றடைந்துள் ளன என இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.**

மடு தேவாலயப் பகுதிக்கு யாத்திரைக்காக வருகை தரும் யாத்திரிகர்களுக்கான தங்குமிட விடுதி அமைப்பதற்கான அடிக் கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை சுற்றுலாத்துறை அமைச் சின் ஏற்பாட்டில் மடுப் பிர தேசத்தில் இடம்பெற்றது.

இந்திய அரசின் நன் கொடையின் கீழ் 30 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் 144 வீடுகளை கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்பு அமைக்க மேற்படி அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் விருந்தின ராகக் கலந்து கொண்டு அடிக் கல்லை நாட்டி வைத்த பின் உரையாற்றுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகமே கொவிட்-19 தொற்றினால் முடங்கியுள்ள நிலையில் பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் பாரிய முயற்சிகளை நாங்கள் முன் னெடுத்து வருகின்றோம்.

இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமான உறவை மிக நெருக்கமாகப் பேணி வருகின் றோம். வீட்டுத்திட்டங்களை வழங்கியதுடன், சுகாதார துறைக்கும் பங்களிப்பை மேற்கொண்டுள்ளோம்.

உதாரணமாக சுவசெரிய அம்புலன்ஸ்களை இலங்கைக்கு வழங்கி உள்ளோம்.

இலங்கைக்கு உதவிகளை வழங்கியுள்ளமை தொடர்பில் இந்திய அரசாங்கம் மகிழ்ச்சி அடைகின்றது - என்றார்.

இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சின் ஒத்துழைப்புடன் செயல் படுத்தப்பட்ட நிலை மாற்று வீடமைப்புத் திட்டத் தின் அடிக்கல் நாட்டும் நிகழ் வில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர் னாண்டோ ஆண்டகை, இலங்கைக்கான இந்திய தூது வர் கோபால் பாக்லே, சுற்று லாத்துறை அமைச்சர் பிரசன்ன ரண துங்க, பாராளுமன்ற உறுப் பினர்களான செல்வம் அடைக் கலநாதன், காதர் மஸ்தான், கே.திலீபன், இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் எஸ். பாலசந்திரன், உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# கழிவு தேயிலை ஏற்றுமதி செய்யும் பிரதான சூத்திரதாரிக்கு வலைவீச்சு

கொழும்பு, மார்ச் 13

இலங்கை தேயிலையின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் கழிவு தேயிலைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் வியாபாரத்தின் பிரதான சூத்திர தாரியை கைது செய்வதற்காக சுங்கத் திணைக்களத்தினர் நீதி மன்றுக்கு சமர்ப்பணங்களை முன்வைத்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்பு டைய சந்தேகநபரை கைது செய்வதற்கான பிடியாணையை பிறப்பிக்குமாறு கோரி இந்த சமர்ப்பணங்கள் முன்வைக்கப் பட்டுள்ளதாக சுங்கத் திணைக் களத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் கழிவு தேயிலைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் வர்த்தகம் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள் ளன.

மிளகாய் தூள் மற்றும் அரசி மா என்ற போர்வையில் வெளி நாடுகளுக்கு இவ்வாறு கழிவு தேயிலைகள் ஏற்றுமதி செய் யப்படுவதாக தெரிய வந்துள் ளது.

இவ்வாறு 70 ஆயிரம் கிலோகிராம் கழிவு தேயிலை அடங்கிய நான்கு கொள் கலன்கள், டுபாயில் அண்மை யில் கைப்பற்றப்பட்டதோடு அவை எதிர்வரும் 23 ஆம் திகதி நாட்டுக்கு மீண்டும் கொண்டு வரப்படவுள்ளன.

இதற்கு முன்னர் கழிவு தேயிலை அடங்கிய 160 பார வூர்தி கொள்கலன்கள் ஈராக் குக்கு ஏற்றுமதி செய்யப்பட்டி ருந்தன.



### கெடுபிடிகள் காரணமாக

# வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி விழா இல்லை

வவுனியா, மார்ச் 13

பல்வேறு கெடுபிடிகள் காரணமாக வவுனியா வெடுக்கு நாறி மலை ஆதி இலிங்கேஸ் வரர் ஆலயத்தில் இம்முறை சிவ ராத்திரி விழா இடம்பெற்றி ருக்கவில்லை.

நெடுங்கேணி வெடுக்குநாறி மலை, ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகள் தொல் பொருள் திணைக்களத்துக்கு கீழ் உள்ளதாக தெரிவித்து, அந்த திணைக்களம் மற்றும் பொலிஸாரால் இரு வழக்குகள் வவுனியா நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு இடம்பெற்று வருகின்றன.

அதனை தொடர்ந்து ஆல யத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டி ருந்தன.

இந்நிலையில் பொலிஸார் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் கெடுபிடிகள் காரணமாக இம்முறை சிவராத் திரி தின விசேட பூசைகள் எவையும் வெடுக்குநாறி மலை யில் இடம்பெறவில்லை. எனி னும் பொதுமக்கள் சென்று வழிபாட்டில் ஈடுபட்டனர்.

# பருத்தித்துறை அதிபரின் வீட்டில் கத்திமுனையில் தாலி அபகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடமராட்சி பருத்தித்துறை, புற்றளைப் பகுதியில் வீடொன்றில் நுழைந்த திருடர்கள் கத்திமுனையில் பெண்ணின் கழுத்தில் இருந்த தாலியை அபகரித்துச் சென்றுள் ளனர்.

மகா சிவராத்திரியையொட்டி வீட்டில் குடும்பஸ்தர் கோயிலுக்குச் சென்ற நிலை யில் நேற்று முன் தினம் மாலை 6:45 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்துள் ளது.

புற்றளையில் வசிக்கும் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய அதிபரின் வீட்டிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

முகத்தை மறைத்து முகமூடி அணிந்து கத்தியோடு உள்நுழைந்த இருவரைக் கண்டதும், வீட்டில் இருந்த அதிபரின் மனைவி, இரு மகள்மார் ஆகியோர் கூச்சலிட்டதைத் தொடர்ந்து, அதிபரின் மனைவியின் கழுத்தில் இருந்த தாலியை அபகரித்துக்கொண்டு கொள்ளையர்கள் தப்பியோடியுள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



# லண்டனுக்கு ஏற்றுமதி செய்ய தயாராகவிருந்த மீன் பறிமுதல்

கொழும்பு, மார்ச் 13

கட்டுநாயக்கா விமான நிலையத்தின் பொருட்கள் ஏற்றுமதி முனையத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட விருந்த ஒரு வகையான மீன்கள் சுங்க பல்லுயிர் பிரிவின் அதிகாரிகளினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சுமார் 60 கிலோகிராம் எடையுள்ள இந்த மீன்கள் பெட்டிகளில் அடைக்கப்பட்டு, சிறிலங்கன் எயார் லைன்ஸின் யுஎல் -503 என்ற விமானத்தின் மூலம் லண்டனுக்கு நேற்று முன்தினம் காலை ஏற்றுமதி செய்ய, கட்டுநாயக்க விமான நிலையப் பொருட்கள் ஏற்றுமதி முனையத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதன்போதே சுங்க அதிகாரிகளினால் இந்த மீன்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், முறையான ஆய்வுகளுக்கு பின்னர் அது அழிக்கப்படவுள்ளது.

வித்தியாசமான, அதிக சுவை கொண்ட இந்த மீன்க ளுக்கு ஐரோப்பா உட்பட பல நாடுகளில் அதிக தேவை உள்ளது.

மீன்வள மற்றும் நீர்வள ஆதாரச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின் கீழ், இந்த மீன்களைப் பிடிப்பது, வைத்திருத்தல், போக்குவரத்து, கொள்முதல், விற்பனை, ஏற்றுமதி ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன.

# பயிர்ச் செய்கைக்கு இடங்களை வழங்க 'விவசாய காணி வங்கி' அமைக்க திட்டம்

கொழும்பு, மார்ச் 13

பயிர்ச் செய்கைகளுக்கான இடங்களை வழங்குவதற்காக, விவசாய காணி வங்கி ஒன்றை அமைக்க யோசனை முன்வைக் கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சகல நிறுவனங்களுக்கும் சொந்தமான இடங்களும் காணி வங்கியின் கீழ் கொண்டு வரப்படவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

அந்த இடங்களை தெங்கு, கறுவா உள்ளிட்ட சிறந்த பயிர்ச் செய்கைகளுக்காக வழங்க நடவடிக்கை எடுக்கப் படவேண்டும் எனவும் அமைச் சர் சமல் கூறினார்.

(அ)



# இந்திய மாசிக் கருவாடு இலங்கையில் தடை!

## காரணம்தான் என்ன?

**பிரபுராவ் ஆனந்தன், ரஞ்சன் அருண் பிரசாத்**

மாசிக் கருவாடு இறக்குமதிக்கு இலங்கை தடை விதித்துள்ளதால், இந்தியாவில் ரூபா 100 கோடி மதிப்பிலான மாசிக் கருவாடு தேக்கம் அடைந்துள்ளது. இதனால் மாசிக் கருவாடு தயாரிப்பாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தூத்துக்குடி மாவட்ட மக்களின் பிரதான தொழில் மீன்பிடித்தல். மீன் பிடி சார்பு தொழில்களான மீன் உணவு உற்பத்தி, கருவாடு தயாரித்தல் உள் ளிட்ட தொழில்களும் அதிகளவில் நடை பெற்று வருகின்றன. குறிப்பாக, அசைவ உணவு பிரியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யவும், மீனவ மக்களின் வருவாய்க்காகவும் மாசிக் கருவாடு தயாரிப்பு குடிசை தொழிலாக இங்கு செய்யப்பட்டு வருகிறது.

**மாசிக் கருவாடு என்றால் என்ன?**

மன்னார் வளைகுடாவில் கிடைக்கும் சூரை மீன்கள் மாசிக் கருவாடு தயாரிக்க முக்கிய மூலதனமாக உள்ளது. இங்கு பிடிக்கப்படும் சூரை மீன்களை கழுவி சுத்தம் செய்து பின் அவற்றைத் தண்ணீரில் நன்றாக அவித்து ஒரு வாரம் முதல் 10 நாட்கள் வரை வெயிலில் உலர்த்தப்படுகிறது. மீன்கள் கல்லை போல் கடினத்தன்மைக்கு மாறும் வரை காய வைக்கப்பட்டு மாசிக்கருவாடு தயாரிக்கப்படுகிறது.

அதன் பிறகு பொதி செய்யப்பட்டு தூத்துக்குடி துறைமுகம்வழியாக கப்பல்களில் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது சூரை மீன்பிடித் தொழில் நலிந்து வருவதால் மாசிக்கருவாடு உற்பத்தியும் குறைந்து வருகிறது.

**வெளிநாடுகளில் தூத்துக்குடி மாசிக்கு நல்ல வரவேற்பு**

தமிழகத்தில் தூத்துக்குடி, ராமநாதபுரம், நாகப்பட்டினம், சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் மாசிக் கருவாடு அதிகளவில் தயாரிக்கப்படுகிறது. இந்த கருவாடுக்கு இலங்கை, ஈரான், பாகிஸ்தான், மாலைதீவு போன்ற நாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது.

இதனால் தமிழகத்தில் இருந்து அதிகளவில் இந்த வகை கருவாடு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தூத்துக்குடியில் தயாரிக்கப்படும் மாசி கருவாடு ஒரு கிலோவுக்கு ரூபா 800 முதல் ரூபா 1000 வரை விற்பனை செய்யப்படுகிறது.

தூத்துக்குடி மாசிக் கருவாட்டுக்கு இலங்கை, மாலைதீவு, இலட்சத்தீவு உள்ளிட்ட நாடுகளில் பெரும் வரவேற்பு இருந்து வருகிறது. இலங்கையில் தற் போது மாசி கருவாடு கிலோ 1500 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**இலங்கையில் திடீர் தடை**

இந்நிலையில், இலங்கை அரசு மாசிக் கருவாடு இறக்குமதிக்கு கடந்த நவம்பர் 5ஆம் திகதி திடீரென தடை விதித்தது. இதனால் மாசிக் கருவாடு தொழில் பாதிப்பை சந்தித்து வருகிறது. இந்த ஏற்றுமதி தடையால் இந்தியாவிற்கு அதிகளவு அந்நிய செலாவணி ஈட்டி தரும் தொழில் நொடிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

மாசிக் கருவாடு இறக்குமதி செய்ய இலங்கை அரசு திடீரென தடை விதித்ததால் இந்த தொழிலை நம்பி வாழ்ந்து வந்த ஏற்றுமதி நிறுவன உரிமையாளர்கள், தொழிலாளர்கள், சார்பு தொழிலாளர்கள் என சுமார் ஒருலட்சத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

இது குறித்து மாசி கருவாடு தயாரிப்பு தொழிலில் ஈடுபட்டு வரும் ஞானராஜ் பேசுகையில்,

"நான் கடந்த 8 ஆண்டுகளாக மாசிக் கருவாடு ஏற்றுமதி தொழிலில் ஈடுபட்டு வருகிறேன். நேரடியாக தருவைகுளம் மீனவர்களிடம் இருந்து சூரை மீன்களை கொள்முதல் செய்து பின் மாசியாக மாற்றி இலங்கை தலைநகர் கொழும்புக்கு ஏற்றுமதி செய்து வந்தோம்.

கொரோனா பரவல் காரணமாக இலங்கையில் கடந்த நவம்பர் மாதம் 5ஆம் திகதி தற்காலிகமாக இந்தியாவில் இருந்து வரும் மாசிக் கருவாடுக்கு தடை விதித்தனர்.

நான்கு மாதங்களுக்கு மேலாகியும் ஏற்றுமதி தடை நீடித்து வருகிறது. இத னால் சுமார் 60 ஆயிரம் கிலோ மாசி கருவாடு தேக்கம் அடைந்துள்ளது. இதன் மதிப்பு சுமார் ரூ. 100 கோடியை தாண்டும்.

என் கம்பனியில் சுமார் 30க்கும் மேற்பட்டோர் வேலை செய்து வருகின்றனர். கடந்த நான்கு மாதங்களாக கருவாடு ஏற்றுமதி செய்யப்படாமல் உள்ள தால் தொழிலாளர்களுக்கு என்னால் வேலை கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். மாற்று தொழில் தேடி செல்ல முடியாமல் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டு எதிர்காலம் கேள்விகுறியாகி உள்ளது.

எனவே மாசிக்கருவாடு மீதான தடையை இலங்கை அரசு நீக்க மத்திய மாநில அரசுகள் இலங்கை அரசுடன் பேசி உரிய நடவடிக்கை எடுத்து இந்த தொழிலை நம்பி வாழ்ந்து வரும் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேலான மக்களின் வாழ்வாதாரத்தை காத்திட வேண்டும்," என ஞானராஜ் கோரிக்கை விடுத்தார்.

மாசி கருவாடு ஏற்றுமதி தடையால் வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் பெண் தொழிலாளி விஜய ராணி பேசுகையில், "கடந்த 2019 ஆம் ஆண்டு மாசி கருவாடு ஏற்றுமதி மிகவும் சிறப்பாக நடைபெற்று வந்தது. அப்போது பெண்கள் இரவு பகலாக மாசி கருவாடு ஏற்றுமதி கம்பெனிகளில் வேலை செய்து வந்தோம். நல்ல சம்பளம் கிடைத்தது.

என்னை போல் சுமார் 200க்கும் மேற்பட்ட பெண்கள் மாசிக் கருவாடு ஏற்றுமதி கம்பெனிகளை நம்பி வாழ்ந்து வருகின்றனர். தற்போது கருவாடு ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளதால் வேலை இல்லாமல் குடும்பத்துடன் தவித்து வருகிறோம்.

என் குழந்தைகள் ஆங்கில வழி கல்வி பயின்று வருகின்றனர். மாசி கருவாடு ஏற்றுமதி கம்பெனியில் இருந்து கிடைக்கும் வருமானத்தை நம்பி நல்ல பள்ளிகளில் சேர்த்தேன் இப்போது வேலை இல்லாததால் எப்படி பள்ளி கட்டணம் கட்ட போகிறேன் என தெரியாமல் குழப்பத்தில் உள்ளேன். எனவே உடனடியாக ஏற்றுமதி தடையை நீக்க வேண்டும் என்கிறார்.

ஒரே கம்பெனியில் 8 வருடத்திற்கு மேலாக வேலை செய்து வந்ததால் வேறு கம்பெனிகளில் வேலைக்கு செல்ல முடியவில்லை. இன்னும் சில நிறுவனங்களின் முதலாளிகள் தங்களது கம்பனிகளை மூட திட்டமிட்டு வருகின்றனர்.

இந்த நிலை நீடித்தால் மாற்று தொழில் தேடி அண்டை மாநிலங் களுக்கு பஞ்சம் பிழைக்க செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும்," என்றார் விஜயராணி இது குறித்து தூத்துக்குடி மாவட்டம் தருவை குளத்தைச் சேர்ந்த மாசிக் கருவாடு ஏற்றுமதியாளர் நிக்சன் பேசுகையில்,

"தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து மட்டும் இலங்கைக்கு தினமும் 20 டன் மாசிக் கருவாடு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. கடந்த 4 மாதங்களாக ஏற்றுமதி இல்லாததால், குடோன்களில் மாசிக் கருவாடு பெருமளவில் தேக்கம் அடைந்துள்ளது. நாடு முழுவதும் ரூ.200 கோடி அளவுக்கு மாசிக் கருவாடு தேக்கம் அடைந்துள்ளது.

ஏற்றுமதி தடைபட்டுள்ளதால் மாசிக் கருவாடு உற்பத்தியும் கடந்த 2 மாதங்களாக குறைந்துள்ளது. இதனால் சூரை மீன் விலையும் சரிந்துள்ளது. துருவைகுளத்தில் கிலோ ரூ.70 வரை விற்பனை செய்யப்பட்ட சூரை மீன், தற்போது ரூ.50 க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதனால் மீனவர்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மாசிக் கருவாடு தயாரிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். மாசிக் கருவாடு இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை இலங்கை அரசு நீக்க, மத்திய அரசு மூலம் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

**இலங்கை நிலைப்பாடு என்ன?**

இலங்கை அரசு ஏன் மாசிக் கருவாடு ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது என்பது குறித்து இலங்கையிலிருந்து பிபிஸி தமிழுக்காக செய்தியாளர் அருண் வழங்கிய தகவல்கள் இங்கே: -

உலகம் முழுவதிலும் இருந்து இலங்கைக்கு கடுவாடு இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதாக அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால் வளர்ப்பு, கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவிக்கின்றார்.

இது தொடர்பாக அவரிடம் பேசிய போது, "இலங்கையில் பிடிக்கப்படும் மீன்களை உரிய முறையில் ஏற்றுமதி செய்ய முடியவில்லை. இலங்கையிலிருந்து கருவாடு ஏற்றுமதி அதிகளவில் இடம்பெறுவதால், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கருவாடுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது," என்று குறிப்பிட்டார்.

இந்த விவகாரத்தில் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி இலங்கையில் இறக்குமதி தடை அமல்படுத்தப்பட்டுள்ளதாக தமிழக மீனவர்கள் குற்றம்சாட்டி வருவது குறித்து இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகரவிடம் கேள்வி எழுப்பினோம்.

அதற்கு அவர், "இது நாட்டின் தீர்மானம். உள்நாட்டிலேயே கருவாடு உற் பத்தி செய்யப்படுவதால், வெளிநாட்டில் இருந்து அதே வகையை இறக்குமதி செய்யும் போது உள்நாட்டு கருவாடுகளுக்கான விற்பனை வீழ்ச்சி அடையும்." என குறிப்பிட்டார்.

இவ்வாறான பின்னணியில், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிநாடுகளிலிருந்து கருவாடுகளை இறக்குமதி செய்ய வேண்டாம் என உள்நாட்டு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக கூறிய இராஜாங்க அமைச்சர், உள்நாட்டு மீனவர்களின் நன்மையை கருத்திற்கொண்டு தாம் இந்த தீர்மானத்தை எட்டியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் கருவாட்டை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கும் எண்ணம் உள்ளதா என விடயத்திற்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சரிடம் கேள்வி எழுப்பியபோது, அதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர், கருவாடு இறக்குமதிக்கான வரியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக கூறினார். எனினும், இலங்கையில் கருவாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இலங்கை கருவாட்டுக்கு வெளிநாட்டுச் சந்தையில் பாரிய கேள்வி காணப்படுவ தாகவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் கருவாடு இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்படும் என கூறிய அவர், அந்த சந்தர்ப்பத்தில் இறக்குமதி வரி பெருமளவு அதிகரிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். எனினும், தற்போதைய சூழ்நிலையில் கருவாடு இறக்குமதிக்கான தேவை கிடையாது என இராஜாங்க அமைச்சர் தெரிவிக் கின்றார். இதேவேளை, பேலியகொடை மீன் சந்தையில் உருவான கோவிட் கொத்தணி காரணமாக, இலங்கையின் மீன் விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் நினைவூட்டினார்.

இலங்கையில் மீன் பயன்பாடு கடந்த காலங்களில் சுமார் 40 வீதம் வரை வீழ்ச்சி அடைந்துள்ளதாக அவர் கூறுகின்றார்.

இந்த நிலையில், மக்கள் கருவாடு பயன்பாட்டை இந்த சந்தர்ப்பத்தில் அதிகரித்துள்ளதாகவும், இலங்கை கருவாடுக்கு உள்நாட்டு சந்தையில் தற்போது தேவை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

உள்நாட்டு கடற்றொழிலாளர்களின் கருவாடு, தேவைக்கு அதிகமாகவே நாட்டில் உள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

கருவாடு மற்றும் மாசி ஆகியவற்றுக்கான இறக்குமதி மாத்திரமே நிறுத்தப்பட்டுள்ளதாக கூறிய அவர், நெத்தலி மற்றும் மீன் இறக்குமதிக்கு தடை விதிக்கவில்லை என தெரிவித்தார். இலங்கைக்கு மீன்களை இறக்குமதி செய்து, கருவாடு உற்பத்தியை மேற்கொள்ள முடியும் எனவும் விடயத்திற்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர குறிப்பிடுகின்றார்.

**நன்றி-பி.பி.ஸி.**

# இலங்கைக்கு நெருக்கடியை கொடுக்கப்போகும் திருத்தங்கள்!





- பார்த்திபன் -

இலங்கை குறித்து ஜெனிவாவில் கொண்டு வரப்படவுள்ளதீர்மானம்மேலும்இறுக்கமாக்கப்பட்டு மேலதிக கலந்தாலோசனைகளுக்காக வெளியிடப்படவிருக்கின்றது. இராஜதந்திர மட்டத்தில் இது குறித்த கலந்துரையாடல்கள் கடந்த சில வாரங்களாக பரபரப்பாக நடைபெற்றது. எதிர்வரும் 16 ஆம் திகதி இதற்கு இறுதி வடிவத்தைக் கொடுப்பதற்கு அங்கத்துவ நாடுகள் திட்டமிட்டுள்ளன. இந்த நிலையில், 23 ஆம் திகதி நடைபெறப்போகும் வாக்கெடுப்பு எவ்வாறு அமையும், என்பதும் இலங்கை அரசாங்கம் இதனை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது என்பதும் பிரதான கேள்விகளாக எழுந்திருக்கின்றன.

மனித உரிமைகள் பேரவையின் அலுவலகம் ஒன்றை இலங்கையில் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இப்போது வலுவடைந்திருப்பதாகத் தெரிகின்றது. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த தகவல்களைச் சேகரிப்பது, ஆதாரங்களைப் பேணிப் பாதுகாப்பது என்பதற்காக இவ்வாறான அலுவலகம் ஒன்று அவசியம் என வலியுறுத்தப்பட்டது. இது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டுவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது இலங்கைக்கு அதிகளவு நெருக்கடியைக் கொடுப்பதாக அமையும். இதனை தடுப்பதற்கான முயற்சிகளை அது முனனெடுக்கும்.

ஜெனிவாவில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத் தொடரில் பிரித்தானியா தலைமையிலான இணைத் தலைமை நாடுகளால் கொண்டுவரப்படும் தீர்மானத்தின் "பூச்சிய வரைவு" ஏற்கனவே வெளியாகியிருந்தது. இது கடந்த காலங்களைப் போல பலமானதாக இல்லை என தமிழ்த் தரப்பினரால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. ஸ்கன்டினேவியன் நாடுகள் சிலவும் இதே போன்ற கருத்துக்களை முன்வைத்திருக்கின்றன.

கடந்த இரண்டு வார காலமாக இடம்பெற்ற உத்தியோகப்பற்ற கலந்தாலோசனைகளின் போது புதிய திருத்தங்கள் முன்வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. குறிப்பாக ஸ்கன்டிநேவியன் நாடுகள் பிரேரணை பலமானதாக்கப்பட வேண்டும் எனவும், கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் சேர்க்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தன. பிரித்தானியாவின் எதிர்க்கட்சியும் பிரேரணை பலமானதாக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்தது. புலம்பெயர்ந்த சில அமைப்புக்களும் இதேபோன்ற அழுத்தங்களைக் கொடுத்திருந்தன.

### ஆணையாளரின் அறிக்கை

குறிப்பாக பூச்சிய வரைபில் 18 மாத கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற நிலையில், அதனை ஆறு மாதமாகக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கை முக்கியமாக முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அதனைவிட, இலங்கைப் பிரச்சினையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை தமிழர் தரப்பினரால் முன்வைக்கப்பட்டிருக்கின்ற போதிலும், அதற்கான வாய்ப்புக்கள் இல்லையென்றே தெரிகின்றது. மேற்கு நாடுகள் அதனை விரும்பாதது இதற்குக் காரணம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் குறித்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஜெனிவாவில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த முடியவில்லை என்பதால், மாற்றுத் திட்டங்கள் குறித்து ஆலோசிக்க வேண்டும் என வும், அதில் குற்றவியல் நீதிமன்றம் முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இணைத் தலைமை நாடுகளின் பிரேரணையைவிட கடுமையானதாக வும் ஆணையாளரின் அந்த அறிக்கை அமைந்திருந்தது. அந்த அறிக்கையின் அடிப்படையில், பிரேரணையும் கடுமையானதாக அமையும் என எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றமடைந்திருக்கின்றார்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரைப் பொறுத் தவரையில் அவர், மனித உரிமைகள் குறித்து மட்டுமே கவனத்திற்கொள்பவர். ஆனால், பிரித்தானியா - கனடா, ஜேர்மனி என்பவற்றை உள்ளடக்கிய இணைத் தலைமை நாடுகளைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்னையை தமது அரசியலுக்கான ஒரு துருப்புச் சீட்டாக மட்டுமே அவை பயன்படுத்துகின்றன. மனித உரிமைகள் என்ற கண்ணோட்டத்தைவிட, அரசியல் நோக்கிலேயே அவை பிரேரணையை அணுகுகின்றன. அதனால், ஆணையாளரின் அறிக்கையை ஒத்ததாக தீர்மானம் அமையும் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல.

### வாக்கெடுப்பு எப்படி அமையும்?

திருத்தப்பட்ட வரைவு நேற்று வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. உத்தியோகப்பற்றற்ற முறையில் இடம்பெறும் கலந்தாலோசனைகளின் போது இதிலும் சில திருத்தங்களைச் செய்வதற்கு இணக்கம் காணப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இதன் இறுதி வடிவம் 16 ஆம் திகதி வெளிவரும் என ஜெனிவா தகவல்கள் சொல்கின்றன. அதனை அடிப்படையாகக் கொண்டு அடுத்த ஒரு வாரத்தில் இடம்பெறப்போகும் வாதப் பிரதிவாதங்களையடுத்து எதிர்வரும் 23 ஆம் திகதி ஜெனிவாவில் வாக்கெடுப்பு இடம்பெறவிருக்கின்றது.

> **உத்தியோகப்பற்ற கலந்தாலோசனைகளின் போது புதிய திருத்தங்கள் முன்வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஸ்கன்டிநேவியன் நாடுகள் பிரேரணை பலமானதாக்கப்பட வேண்டும் எனவும், கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் சேர்க்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தன. பிரித்தானியாவின் எதிர்க்கட்சியும் பிரேரணை பலமானதாக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்தது.**

இந்த வாக்கெடுப்பின் பெறுபேறு எவ்வாறானதாக அமையும் என்பது குறித்த எதிர்வுகூறல்கள் சில வெளியிடப்பட்டுள்ளன. இதில் தாம் தோற்கடிக்கப்படுவோம் என்பதைத் தெரிந்துகொண்டே இலங்கை காய்களை நகர்த்துகின்றது. சர்வதேச அரசியலைவிட உள்நாட்டு அரசியலுக்கான முதலீடாக இதனைப் பயன்படுத்துவதுதான் இலங்கையின் திட்டம். சர்வதேச அச்சுறுத்தலை எதிர்கொள்ளக்கூடிய ஒரேயொரு அரசு பொது ஜன பெரமுன அரசுதான் என்ற கோஷத்துடன் மாகாண சபைத் தேர்தல்களை நோக்கி இலங்கை செல்லும் என எதிர்பார்க்கலாம்.

47 நாடுகளைக் கொண்டிருக்கும் மனித உரிமைகள் பேரவையில், 15 நாடுகள் இலங்கையை ஆதரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சீனா, பாகிஸ்தான், கியூபா, பிலிப்பைன்ஸ் உட்பட மத்திய கிழக்கு, மற்றும் ஆபிக்க நாடுகள் சில இதில் உள்ளடக்கம். ஏற்கனவே 10 நாடுகளின் ஆதரவுதான் இலங்கைக்கு உறுதியாக இருந்தது. கொரோனாவால் மரணமடைபவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம் என்ற இலங்கை அரசின் புதிய தீர்மானம் மேலும் ஐந்து நாடுகளின் ஆதவை அதற்குப் பெற்றுக்கொடுத்திருக்கின்றது.

29 நாடுகள் பிரேரணையை ஆதரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக மேற்கு நாடுகளின் முழுமையான ஆதரவு பிரேரணைக்கு கிடைக்கும். இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகள் வாக்கெடுப்பின் போது நடுநிலை வகிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தற்போதைய நிலை. பிரேணையின் இறுதிவடிவம் வெளியிடப்பட்டு - அதன் தொடர்ச்சியாக இடம்பெறக் கூடிய பேரம்பேசல்களையடுத்து இந்த நிலை மாற்றமடையலாம்.

### இலங்கையின் உபாயம்?

புதிய பிரேரணையை தோற்கடிப்பதென்பது கடினமாக செயலாகும் என்று பிராந்திய கூட்டுறவு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்திருப்பது கவனிக்கத்தக்கது. ஜெனிவா தொடரில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள பிரேரணையை தோற்கடிப்பதற்கு 24 நாடுகளின் ஆதரவு அவசியம். அதற்கான சாத்தியம் உள்ளதா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் தெரிவித்த கருத்துக்கள் முக்கியமானவை. கவனத்துக்குரியவை. அவர் கூறியது இதுதான்:

"தற்போதைய பூகோள அரசியலின் அடிப்படையில் இது கடினமான செயலாகும். போர்க்காலத்தில் நடந்த சம்பவங்களை மட்டும் அடிப்படையாகக்கொண்டு பிரேரணை வந்திருந்தால் 24 அல்ல 47 நாடுகளின் ஆதர வைக்கூட பெற்றிருக்கலாம். இதனால் பூகோள அரசியல் நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும். எதுஎப்படி இருந்தாலும் மனித உரிமைமீறல் குற்றச்சாட்டு தொடர்பில் முடி வொன்றை காணவேண்டும் என இணைத் தலைமை நாடுகளிடம் தெரிவித்துள்ளோம். இப்பிரச் னையை அடுத்த தலைமுறைக்கு விட்டுவைக்க கூடாது. இதற்கு மேற்குலகம் உடன்படுமா என்பது எமக்கு தெரியாது. அரபுலகம் இலங் கைக்கு ஆதரவு வழங்கும். இந்தியாவும் நேசக் கரம்நீட்டும் என நம்புகின்றோம்" என்று அவர் கூறியிருக்கின்றார்.

அதாவது, பிரேரணையை எதிர்கொள்ளக்கூடிய பலம் தம்மிடம் இல்லை என்பதைத் தெரிந்துகொண்டுதான் இலங்கை அரசாங்கம் காய்களை நகர்த்துகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில், இந்தியா இதில் எவ்வாறு வாக்களிக்கும் என்பதில் அதிகளவு அக்கறையாக இருக்கின்றது. இந்தியா பொதுத் தேர்தலை எதிர்கொள்வதால், இலங்கையைப் பாதுகாக்க முற்படாது. அதேவேளையில், இலங்கைக்கு எதிராகச்செயற்பட்டால், இலங்கை மீதான அனைத்துப்பிடிகளையும் இழந்துவிடும். அதனால், நடுநிலை வகிப்பது என்ற நிலைப்பாட்டை அது எடுத்துள்ளது.

ஆசிய நாடுகளின் பிரதிநிதிகளுடனும் இலங்கை பேச்சுக்களை மேற்கொண்டுவருகின்றது. வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இந்தப் பேச்சுக்களை முன்னெடுத்துவருகின்றார். பிரேரணையின் உள்ளடக்கம் வெளியான பின்னரே தமது நிலைப்பாட்டை அந்த நாடுகள் வெளிப்படுத்தும் என்ற கருத்தை அமைச்சர் வெளிப்படுத்தியிருக்கின்றார். இலங்கையுடன் நெருக்கமான - நட்பான உறவை அந்த நாடுகள் கொண்டிருந்தாலும், மேற்கு நாடுகளின் அழுத்தங்களும் அதிகமானதாகவே இருக்கின்றது. பிரேரணை இறுதியாக்கப்பட்ட பின்னரே தமது நிலைப்பாட்டை பெரும்பாலான நாடுகள் வெளிப்படுத்தும்.

ஈழநாடு




# புலமைச் சிகரம் 13

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

**2011**

*. தொடக்கத்தில் உள்ள உருக்களுடன் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் உருவைத் தெரிவுசெய்க.

10.





11.





* வெற்று அடைப்புக்குப்பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

14.





* வெற்று அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

15.





17. உருக் கோலத்தில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.





**2012**

* மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ள உருச்சோடிக்குரிய அடைப்பைத் தெரிவு செய்க.

01.




02.




**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

---

*சீனாவுடனான போட்டித்தன்மைக்காக*

# ‘இந்தியா இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் செயல்படக்கூடாது’

கொழும்பு, மார்ச்.13

**இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான போட்டித்தன்மையை இந்தியா ஜெனிவா விவகாரத்தில் இலங்கைக்கு எதிராக வெளிப்படுத்தக்கூடாது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: ‘ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இம்முறை இடம்பெறவுள்ள கூட்டத்தொடர் தீர்மானமிக்கதாக அமையும்.

ஆகவே, ஜெனிவா விவகாரத்தை அரசாங்கம் நுணுக்கமான முறையில் கையாள வேண்டும். நாடு என்ற ரீதியில் தனித்துச் செயல்பட முடியாது. சர்வதேச நாடுகளின் ஆதரவு அவசியமாகும்.

இதேவேளை, ஜெனிவா விவகாரத்தில், இலங்கைக்கு இந்தியா ஆதரவு வழங்கும் என ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், தற்போது அந்த எதிர்பார்ப்பில்சற்று தளம்பல்நிலை காணப்படுகின்றது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான முரண்பாட்டை இந்தியா இலங்கைக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடாது.

இந்தியா தற்போது அமெரிக்காவின் கொள்கையை ஈர்த்து செயல்படுவதை அவதானிக்க முடிகின்றது. ஒருபுறம் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் முரண்பாடு, மறுபுறம் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் முரண்பாடு காணப்படுகின்றது.



இந்த மூன்று நாடுகளும் இலங்கையை ஜெனிவா விவகாரத்தில் நெருக்கடிக்குள்ளாக்கக்கூடாது. சீனா இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கும் என்ற உறுதிப்பாட்டை அமெரிக்காவும் இந்தியாவும் விரும்பவில்லை.

பலம் கொண்ட இந்த மூன்று நாடுகளும் இலங்கையின் தேசிய வளங்களைக் கைப்பற்ற ஆரம்ப காலத்திலிருந்து பல்வேறு வழிமுறைகளில் முயற்சித்துள்ளன’ என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

---

# கிழக்கு, ஊவா மாகாணங்களில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, மார்ச்.13

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், நுவரெலியா, பொலநறுவை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் பல இடங்களில் மழைபெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில்: ‘சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் கண்டி மாவட்டங்களிலும் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது. இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் மேல் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள்கொந்தளிப்பாகவும் காணப்படும்.’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

---

# யாழ்.- சென்னை இடையே மீண்டும் விமான சேவை

மன்னார், மார்ச்.13

கொரோனா வைரஸ் தொற்று அச்சத்தால் இடைநிறுத்தப்பட்ட யாழ்ப்பாணம் - சென்னைக்கு இடையிலான நேரடி விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் தயாராகி வருகின்றது.

இதேவேளை, இரத்மலானை - யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு இடையே உள்நாட்டு விமான சேவையையும் விரைவில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பலாலி மற்றும் மட்டக்களப்பு விமான நிலையங்களை சர்வதேச விமான நிலையங்களாக அபிவிருத்தி செய்ய எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய அரசின் உதவியுடன் 300 மில்லியன் ரூபா செலவில், மன்னார் மடு மாதா தேவாலயத்தில் யாத்திரிகர்களுக்கான 144 இடைத்தங்கல் வீடுகளை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லை இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயுடன் இணைந்து சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று முன்தினம்நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)




# 'எங்களது உறவுகளைத்தேடும் உரிமை எங்களுக்கு உள்ளது'

மட்டக்களப்பு,மார்ச்.13

எங்களது உறவுகளைத் தேடும் உரிமை எங்களுக்கு இருக்கின்றது. எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது? என்று கேட்கும் உரிமை எங்களுக்கு இருக்கின்றது. வீதியோரங்களில் இருந்து எங்களது உறவுகளைத் தேடமுடியாத நிலையிலேயே இன்று கண்ணீர்விட்டு வருவதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவி அ.அமலநாயகி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றிலில் தமிழர்களின் பல்வேறு பிரச்னைகளுக்கு சர்வதேசத்தின் நீதியை எதிர்பார்த்து முன்னெடுக்கப்படும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வடக்கு- கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப் பட்ட அநீதி களுக்கு உள்ளக ரீதியாக எந்தவித நீதியும் கிடைக்கப் போவதில்லை யெனவும் சர்வதேச நீதிமன்றில் இலங்கை நிறுத்தப்பட்டு தமக்கான நீதியைப்பெற்றுக்கொடுக்க சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என அவர் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

# தமிழர் போராட்டத்துக்கு முஸ்லிம்களும் ஆதரவு

அம்பாறை,மார்ச்.13

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்று வரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு முஸ்லிம் மக்களும் ஆதரவு வழங்கி இணைந்துள்ளனர்.

கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமாகி போராட்டம் இடம்பெற்று வரும் நிலையில் 7 ஆவது நாளான நேற்று முன்தினம் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான பேரணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும், கல்முனை இளைஞர் சேனையின் முன்னாள் தலைவருமான தாமோதரம் பிரதீபன், நாவிதன்வெளி பிரதேசசபை உறுப்பினர் என். தர்சினி, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான அழககோன் விஜயரட்ணம், பொன். செல்வநாயகம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இளைஞர் அணித் தலைவர் துசானந்தன், ஜோசப் பரராஜசிங்கம் மக்கள் அமைப்பின் தலைவி கந்தையா கலைவாணி, உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

சுழற்சி முறையான இப்போராட்டத்தை பல்வேறு தடைகளை உடைத்து முன்னெடுத்துள்ளோம். அரசாங்கம் பல தவறுகளைச் செய்துள்ளது.

அதற்காக சர்வதேச குற்ற வியல் நீதிமன்ற விசாரணையை கோரியே இப்போராட்டத்தை மேற்கொண்டுள்ளோம் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர். (எ)

# பௌத்த அமைப்புக்களை அடிபணிய வைக்கமுடியாது

## ஞானசார தேரர் சூளுரை

கொழும்பு,மார்ச்.13

**ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கையால் பௌத்த அமைப்புக்களை அடிபணிய வைக்க முடியாது. அதேவேளை, இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு எதிராக அரசாங்கம் உரிய முறையில் செயல்படும் என்ற நம்பிக்கையும் எமக்குக் கிடையாது.**

**குண்டுத்தாக்குதல் குறித்த விசாரணை அறிக்கை அரசாங்கத்தின் அரசியல் பிரச்னையாகி விட்டது. எனவே, இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு எதிராக இனிக் கடுமையான நடவடிக்கைகளை நாடு தழுவிய ரீதியில் பௌத்த துறவிகளை ஒன்றிணைத்து முன்னெடுப்போம் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் எச்சரித்துள்ளார்.**



ஏப்ரல் - 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் சுதந்திர சதுக்க வளாகத்தில் முன்னெடுக்கப் பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதம் பல்வேறு துறைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றது என்பதை ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களுக்கும் எடுத்துரைத்துள்ளோம்.

குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அனைத்து அரசாங்கங்களும் அடிப்படைவாதத்தை வளர்த்து எம்மை இனவாதிகளாக சித்திரித்தது. அனைத்துத் தரப்பினரது பல வீனத்தன்மையும் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலாக வெளிப்பட்டது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் உக்கிரத்தன்மையை வெளிப்படுத்தியது. இந்தக்குண்டுத்தாக்குதலின் பின்னணியில் இருந்தது யார்? எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க முன்னெடுக்க வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயவே ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழுவின் ஆரம்பகால செயல்பாடுகள், விசாரணைகள் சிறந்த முறையில் இடம்பெற்றன. ஆனால், ஆணைக் குழுவின் செயல்பாட்டின் இறுதிப் பகுதி அரசியல்மயப்படுத்தப் பட்டது. தேசிய பிரச்னையாக உருவெடுத்துள்ள இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லா தொழிக்க முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஏதும் ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்படவில்லை. மாறாக தனிப்பட்ட முரண்பாடுகளுக்கு பழி தீர்க்கும் ஒரு களமாக ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் பௌத்த அமைப்புக்களைத் தடை செய்யும் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் வரலாற்று ரீதியில் இடம்பெற்றுள்ளன. ஆணைக்குழு அறிக்கைகளுக்கு ஏற்ப பௌத்த அமைப்புக்களை ஒருபோதும் அடிபணிய வைக்க முடியாது என்பதை அரசாங்கத்துக்கு தெரிவித்துக் கொள்கிறோம். நாட்டில் இனவாதத்தை தோற்றுவிக்கும் வகையில் பௌத்த அமைப்புக்கள் ஒருபோதும் செயல்படவில்லை. பௌத்த மதத்துக்கு பாதிப்பு ஏற்படும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதை இனவாதச் செயல்பாடு எனக் குறிப்பிட முடியாது.

மதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ள இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என எதிர்பார்க்க முடியாது.

பௌத்த நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்கும் பொறுப்பை பௌத்த மதத் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஏற்க வேண்டும்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்க அரசாங்கத்துக்கு முன்வைத்துள்ள யோசனைகளுக்கு மகா நாயக்க தேரர்கள் முழுமையான ஆதரவை வழங்குவார்கள். அனைத்து மதத் தலைவர்களையும் ஒன்றிணைத்து நாடு தழுவிய ரீதியில் இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு எதிரான கடுமையான நடடிவடிக்கைகளை இனி முன்னெடுப்போம்.

பாரம்பரிய முஸ்லிம் மக்களின் உரிமைளுக்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்பது எமது நோக்கமல்ல. இஸ்லாமிய மத போர்வையில் தோற்றம் பெற்றுள்ள அடிப்படைவாதத்துக்கு எதிராகவே செயல்படுகின்றோம். இதற்கு பாரம்பரிய முஸ்லிம் சமூகத்தினரும் முழுமையான ஆதரவை வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம்- என்றார். (எ)

# நீதிமன்றக் கட்டமைப்பு மறுசீரமைப்புக்குள் குழந்தை பராமரிப்புக்கு உரிய முன்னுரிமை

## ஹிருணிக்காவுக்கு அலி சப்ரி நன்றி

கொழும்பு, மார்ச்.13

நீதிமன்றக் கட்டமைப்பு மறுசீரமைப்புக்குள் குழந்தை பராமரிப்புக்கு தேவையான வசதிகளை செய்ய முன்னுரிமை வழங்குவேன் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நீதிமன்றங்களுக்கு குழந்தைகளுடன் செல்லும் தாய்மார் எதிர்கொள்ளும் சிரமத்தை போக்க நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, நீதி அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவந்திருந்த விடயத்துக்கு நன்றி தெரிவித்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தாய்மார்களின் வாழ்க்கையில் முக்கிய அம்சமான தாய்ப்பால் கொடுக்கும் விடயம் தொடர்பில் நீதிமன்றக் கட்டமைப்பில் எந்த வசதிகளும் இல்லாமையால் அவர்கள் எதிர்கொள்ளும் சிரமம் தொடர்பில் எனது கவனத்துக்குக் கொண்டு வந்ததற்காக ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தாய்மையின் முக்கியத்துவத்துக்கு என்னால் ஒரு விலைமதிப்பை வைக்க முடியாது, இதன்படி எந்தவொரு தாயும் தனது குழந்தைக்கு உணவளிக்க வேண்டிய அவசியம் காரணமாக நீதிமன்றங்களுக்கு வருவதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியதில்லை. எந்தவிதமான விமர்சனமும் அல்லது தடையும் இல்லாமல் நீதியை அணுகுவதை உறுதிப்படுத்த நான் உறுதியாக இருக்கிறேன்.



அத்துடன் நீதிமன்றக் கட்டமைப்பு நிர்வாகத்துக்குள் குழந்தை பராமரிப்புக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இந்த நடவடிக்கையை மேற்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன். தற்போது நடந்து கொண்டிருக்கும் நீதிமன்ற கட்டமைப்பு மறுசீரமைப்புக்குள் இதற்கு முன்னுரிமை வழங்குவேன் என்பதை உறுதியளிக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

ஈழநாடு



# பட்டினிச் சாவு அபாயத்தில் இலட்சக்கணக்கான மக்கள்!

## ஐ. நா. பொதுச் செயலர் எச்சரிக்கை



**நியூயோர்க், மார்ச் 13**

**உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் இறக்கும் அபாயம் உள்ளது. இந்த நிலைமை மனிதனால் வேண்டுமென்றே ஏற்படுத்தப்படுகின்றது என்றும் ஐ. நா. சபை குற்றஞ்சாட்டியுள்ளது.**

உணவு மற்றும் பாதுகாப்பு தொடர்பான கூட்டம் ஒன்றில் ஐ.நா. சபையின் பொதுச் செயலர் அன்ரனியோ குட்ரெரஸ் உரையாற்றுகையில்,

“உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் இறக்கும் அபாயம் ஏற்படவுள்ளது. உடன டியாக நடவடிக்கை எடுக்கத் தவறினால் தீவிர பசி மற்றும் மரணத்தின் விளிம்பை அடைவார்கள்.

“கொரோனா மற்றும் கால நிலை மாற்றம் வறுமை நிலையை அதிகரித்துள்ளது. நீங்கள் மக்களுக்கு உணவளிக்கவில்லை என்றால் மோதலை உருவாக்கு கிறீர்கள் என்று அர்த்தம். பஞ்சமும், பசியும் உணவு இல்லாததால் ஏற்படவில்லை. அவை மனிதனால் வேண்டு மென்றே ஏற்படுத்தப்படு கின்றன” என்று தெரிவித்தார். (ஐ)



# ரூ.11 கோடி, 11 கிலோ தங்கம் ஆங் சான் சூகி பெற்றாராம்!

## இராணுவ ஆட்சி பீடம் சாடல்

*யங்கூன், மார்ச் 13*

ஆங் சான் சூகி 6 இலட்சம் டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 11 கோடியே 40 இலட்சம் ரூபா மற்றும் 11 கிலோ தங்கம் என்பவற்றை சட்டவிரோதமாகப் பெற்றார் என்று மியன்மார் இராணுவ ஆட்சிப் பீடம் அவர் மீது குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் இராணுவ ஆட்சிக்கு உட்பட்ட மியன்மார், அந்நாட்டின் ஜனநாயக தலைவரான ஆங் சான் சூகி உட்படப் பலரை சிறையில் அடைத்துள்ளது.

இவர்கள் மீது வழக்கு தொடர்ந்து வரும் நிலையில், ஆங் சான் சூகி சட்டவிரோதமாக பணம், தங்கம் என்பவற்றை பெற்றார் என்று இப்போது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆங் சான் சூகி மீதான இந்தக் குற்றச்சாட்டுகளை தேசிய ஜனநாயக லீக் கட்சி திட்டவட்டமாக மறுத்துள்ளது. (ஐ)

# ஹமாஸின் காஸா தலைவராக மீண்டும் யஹ்யா அல் சின்வார்

*கிழக்கு ஜெருசலேம், மார்ச் 13*

காஸா முனையின் அரசியல் பிரிவு தலைவராக மீண்டும் யஹ்யா அல் சின்வார் ஹமாஸ் அமைப்பால் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையே நீண்டகாலமாக மோதல் நிலவுகின்றது. பலஸ்தீனத்தின் தன்னாட்சி உரிமை பெற்ற பகுதியாக மேற்கு முனை எனப்படும் காஸா உள்ளது. இந்தப் பகுதியை பலஸ்தீன போராட்ட அமைப்பான ஹமாஸ் ஆட்சி செய்கிறது.

இந்தப் பகுதியை சொந்தம் கொண்டாடும் இஸ்ரேல் அந்த அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அறிவித்து, காஸாவை கைப்பற்ற போரிட்டு வருகின்றது.

இந்நிலையில், அடுத்த நான்கு ஆண்டுகளுக்குத் தலைவராக யஹ்யா அல் சின்வார் அறிவிக்கப்பட்டுள்ளார். பலஸ்தீன போராளிகளுக்கு எதிரான சிலரை கொன்றார் என்ற குற்றச்சாட்டில் சின்வாருக்கு இஸ்ரேல் 20 ஆண்டு சிறை விதித்தது. பின்னர், கைதிகள் பரிமாற்றத்தின் போது 2011ஆம் ஆண்டு இவர் விடுவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொரோனா தடுப்பு மருந்து ஏற்றுமதிக்கு தடை இல்லை!

## உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிப்பு

*ஜெனிவா, மார்ச் 13*

கொரோனா தொற்று தடுப்பு மருந்து ஏற்றுமதிக்கு எந்தத் தடைகளும் இல்லை என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று வேகமாக பரவிவரும் நிலை யில், தொற்றை தடுக்கக் கண்டுபிடிக்கப்பட்ட மருந்து களுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி அளித்துள் ளது.

அனுமதிக்கப்பட்ட பல மருந்துகள் தொற்றை தடுக்கின்றன என்றாலும், சில மருந்துகளால் பக்கவிளைவுகளும் ஏற்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. இதனால், தடுப்பு மருந்துகளை ஏற்றுமதி செய்வதில் சிக்கல் நிலை உருவானது.

இந்நிலையில், அங்கீகரிக்கப்பட்ட தடுப்பு மருந்தை உலகம் முழுவதும் அனுப்ப முடியும். இதற்கு எந்தத் தடையும் இல்லை என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது. (ஐ)



12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்புடும் மகா கும்பமேளா இந்தியாவின் உத்தரப்பிரதேசம் ஹரித்துவாரில் மகா சிவராத்திரி தினத்தன்று ஆரம்பமானது. ஏப்ரல் மாதம் நடக்கவுள்ள கங்கை புனித நீராடலுக்காக அங்கு பெருமளவு சாதுக்கள் தற்போது கூடிவருகின்றனர்.

# சீனாவை புறக்கணிக்க குவாட் நாடுகள் முடிவு



*வாஷிங்டன், மார்ச் 13*

பொருளாதார ரீதியாக சீனாவை சாரமல் இயற்கை வளம், எரிவாயு தொழில்நுட்பம் என்பவற்றை மேம்படுத்த அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பான குவாட் முடிவு செய்துள்ளது.

சீனா இராணுவ, கடற்படை பலத்தை வெகுவாக அதிகரித்தது. இதற்கு எதிராக அமெரிக்கா நான்கு நாடுகளின் இராணுவ, கடல் பலத்தை ஒன்றிணைத்தது. இந்தக் கூட்டணி குவாட் என்று அழைக்கப்படுகின்றது.

2017இல் தொடங்கப்பட்ட இந்தக் கூட்டமைப்பு, தமக்கிடையிலான உறவை வலுப்படுத்தி வருகின்றது.

இந்நிலையில், நேற்று முன் தினம் நடந்த கூட்டத்தில், சீனாவின் பங்களிப்பை எதிர்பாராமல் கார் உற்பத்தியை தயாரித்து விற்க இந்த நாடுகள் முடிவு செய்துள்ளன.

அத்துடன், கார் தயாரிக்க தேவையான முக்கிய தாது பொருட்கள் மற்றும் உலோகங்களைப் பாதுகாக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. சீனாவின் உதவி மற்றும் தாது பொருட்கள் ஏற்றுமதி ஆகியவற்றை சாராமல் தங்கள் நாட்டிலுள்ள கனிம வளம் மற்றும் உலோக வளத்தை பகிர்ந்தளித்து கார் தயாரிப்பில் ஈடுபட வேண்டும் என்றும் அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ஐ)

# மியன்மார் இராணுவத்தின் தாக்குதல்களில் 70 பேர் பலி!



*யங்கூன், மார்ச் 13*

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தியோர்மீது படையினர் மேற்கொண்ட தாக்குதல்களில் நேற்றுவரை 70 பேர் உயிரிழந்தனர் என்று மியன்மாரின் மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் நிபுணர் தெரிவித்துள்ளார்.

மியன்மாரின் தற்போதைய நிலை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய மனித உரிமை புலனாய்வாளர் தோமஸ் அண்ட்ரூஸ், “மியன்மார் நாடு ஒரு கொலைகார, சட்டவிரோத ஆட்சியால் கட்டுப்படுத்தப்படுகிறது” என்றும் கூறினார்.

கொலை செய்யப்பட்டவர்களில் அரைப்பங்குக்கும் அதிகமானவர்கள் 25 வயதிற்கு உட்பட்டவர்கள். ஆட்சி கவிழ்ப்பு மற்றும் வன்முறை படிப்படியாக அதிகரித்து வருவதால் 2,000 இற்கும் மேற்பட்டோர் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்ப்பாளர்கள், மருத்துவர்கள் மற்றும் பொதுமக்களை படையினர் கொடூரமாக தாக்கியமைக்கான விரிவான காணொலி சான்றுகள் உள்ளன. படையினரும் பொலிஸாரும் அக்கம் பக்கங்களில் திட்டமிட்டு நகர்வது, சொத்துக்களை அழிப்பது, கடைகளை சூறையாடுவது, எதிர்ப்பாளர்களையும் வழிப்போக்கர்களையும் தன்னிச்சையாக கைது செய்வது மற்றும் மக்களின் வீடுகளில் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தும் காணொலிகளும் உள்ளன என்றும் அண்ட்ரூஸ் தெரிவித்தார்.

இதேவேளை, சிரேஷ்ட இராணுவ தலைவர்கள் மீதும், நாட்டின் முக்கிய வருமானங்களின் மீதும் தடைகள் விதிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)




# 10,000 ஓட்டங்கள்: மிதாலி ராஜ் சாதனை

புதுடில்லி, மார்ச் 13

சர்வதேச மகளிர் கிரிக்கெட்டில் 10,000 ஓட்டங்களைக் கடந்த முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையை மிதாலி ராஜ் பெற்றுள்ளார்.

அதேநேரம் ஒட்டுமொத்த சர்வதேச மகளிர் கிரிக்கெட் அரங்கில் 10 ஆயிரம் ஓட்டங்களை பெற்ற இரண்டாவது வீராங்கனை என்ற பெருமையையும் அவர் பதிவுசெய்தார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக நேற்று இடம்பெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியிலேயே அவர் இந்த இலக்கை எட்டியுள்ளார்.

சர்வதேச அளவில் 10,273 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்து வீராங்கனை சார்லட் எட்வர்ட் முதலிடத்தில் இருக்கிறார்.

இவருக்கு அடுத்து மிதாலி ராஜ் இப்போது இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார். இந்தப் போட்டியில் 36 ஓட்டங்களை எடுத்து அவர் ஆட்டமிழந்தாலும், அவரின் 10 ஆயிரம் ஓட்ட சாதனையை பலரும் பாராட்டி வருகின்றனர். (ஐ)




# நாடு திரும்பினார் அஞ்சலோ மத்தியூஸ்

கொழும்பு, மார்ச் 13

மேற்கிந்தியத் தீவுகளில் இலங்கை அணி தற்போது விளையாடி வருகின்றது. இந்நிலையில், தொடரின் இடையிலேயே ஏஞ்சலோ மத்தியூஸ் நாடு திரும்பியுள்ளார் என்று இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

தனது குடும்பத்தின் நிகழ்வு ஒன்றுக்காகவே, மத்தியூஸ் நாடு திரும்பினார் என்று கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

மேற்கிந்தியத்தீவுகளில் இருபது- 20 தொடரை இழந்த இலங்கை அணி, தற்போது முதல் ஒருநாள் போட்டியிலும் தோல்வியைத் தழுவியுள்ளது. இந்நிலையில் மூத்த - அனுபவ வீரரான மத்தியூஸ் நாடு திரும்பியிருப்பது அணிக்கு மேலும் பின்னடைவை கொடுக்கும் என்று கருதப்படுகின்றது. (ஐ)

## ஜாம்பவான்களின் ரி - 20

# தென்னாபிரிக்காவிடம் வீழ்ந்தது இங்கிலாந்து!



ராஜ்பூர், மார்ச் 13

இங்கிலாந்து ஜாம்பவான்கள் அணியை 8 விக்கெட்களால் இலகு வெற்றி கொண்டது தென்னாபிரிக்க ஜாம்பவான்கள் அணி.

வீதிப் பாதுகாப்பை வலியுறுத்தி உலக முன்னாள் ஜாம்பவான்கள் பங்கேற்கும் இருபது - 20 தொடர் இந்தியாவின் ராஜ்பூரில் நடக்கிறது.

இதில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த ஆட்டத்தில் பீற்றர்சன் தலைமையிலான இங்கிலாந்து அணியும், ஜொன்டி றொட்ஸ் தலைமையிலான தென்னாபிரிக்கா அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து ஜாம்பவான்கள் எவரும் குறிப்பிடும்படியாக ஆடவில்லை. டரன் மட்டி 25, கிறஸ் ட்ரெம்லெற் 23, பீற்றர்சன் 21, கிறிஸ் ஸ்கோபீல்ட் 12, உஸ்மான் அப்சல் 10 என்று சொற்ப ஓட்டங்களில் வீழ்ந்தனர். இதனால், 18.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்த அந்த அணி 121 ஓட்டங்களைப் பெற்றது.

தென்னாபிரிக்காவின் சார்பில் பந்து வீசிய ரிஷாபலாலா 3 விக்கெட்களையும், மக்காய நிற்னி, புரியின் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

122 ஓட்டங்கள் என்ற இலகு இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடியது தென்னாபிரிக்கா. அன்ட்ரு புட்ரிக் - மோரன் வான் வைக் இணை தொடக்கம் கொடுத்தது. புட்ரிக் 23 ஓட்டங்களுடனும், மோர்ன் வான் 46 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்த நிலையில், 13 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்த தென்னாபிரிக்க ஜாம்பவான்கள் அணி 125 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

அல்விரோ பீற்றர்சன் 31, ஜொன்டி றொட்ஸ் 17 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர். (ஐ)

# டுபாய் சம்பியன் ரென்னிஸ்: அரையிறுதியில் முகுருஷா



டுபாய், மார்ச் 13

டுபாய் சம்பியன்ஷிப் ரென்னிஸ் போட்டியின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் சபலென்காவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார் முகுருஷா.

டுபாயில் பெண்களுக்கான டபிள்யூ. ரி. ஏ. ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் இரவு நடந்தன.

இதில், ஸ்பெய்னின் முகுருஷா பெலாரஸின் சபலென்காவை எதிர் கொண்டார்.

முன்னணி வீராங்கனைகள் மோதிய இந்த ஆட்டம் பரபரப்பாக நடந்தது. முதல் செற்றில் சபலென்கா 6 -3 என்ற கணக்கில் வெற்றி கொண்டார்.

ஆனால், இரண்டாவது சுற்றில் சுதாகரித்த முகுருஷா 6 -3 என்ற கணக்கில் பதிலடி கொடுத்தார். மூன்றாவது சுற்றிலும் 6 - 2 என்ற கணக்கில் முகுருஷாவே வெற்றி கொண்டார். இதனால், அவர் அரையிறுதிக்கு முன்னேறினார்.

ஏனைய காலிறுதி ஆட்டங்களில், சுவிற்சர்லாந்தின் ரெய்ச்மன், அமெரிக்காவின் கௌளப்பையும், பெல்ஜியத்தின் மெர்ற்னெஸ், அமெரிக்காவின் பெகுலாவையும், செக் குடியரசின் கிரெசிகோவா, ரஷ்யாவின் பொற்போவாவையம் வெற்றி கொண்டனர். (ஐ)



# மேற்கிந்தியாவின் டெஸ்ட் தலைவராக பிராட் வைற்!

ஜமைக்கா, மார்ச் 13

மேற்கிந்தியத் தீவுகளின் டெஸ்ட் அணித் தலைவராக கிரைக் பிராட் வைற் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிராட் வைற் தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 - 0 என்ற ரீதியில் பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது.

கொரோனா தொற்று அச்சம் காரணமாக மேற்கிந்தியத் தீவுகளின் டெஸ்ட் அணித் தலைவர் ஜசன் ஹோல்டர் பங்கேற்கவில்லை. இதனால், அந்தத் தொடருக்கான அணித் தலைவராக பிராட் வைற் நியமிக்கப்பட்டார்.

தொடர் வெற்றியைத் தொடர்ந்து, இலங்கையுடனான டெஸ்ட் தொடருக்கும் பிராட் வைற் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இரு போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடர் மார்ச் 21 முதல் தொடங்குகிறது. (ஐ)

# இந்தியா-இங்கிலாந்து ரி-20 50வீத ரசிகர்களுக்கு அனுமதி!

அஹமதாபாத், மார்ச் 13

இந்தியா - இங்கிலாந்து இருபது - 20 தொடரைக் காண 50 வீதமான ரசிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இரு அணிகளிடையேயான இருபது - 20 தொடர் நேற்று அஹமதாபாத்தில் தொடங்கியது. இந்த மைதானத்திலேயே ஐந்து இருபது - 20 போட்டிகளும் நடக்கவுள்ளன.

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக கடந்த டெஸ்ட் தொடருக்கு ரசிகர்கள் அனுமதிக்கப்படவில்லை. இந்நிலையிலேயே 50 வீத ரசிகர்களை மட்டும் போட்டிகளை காண இந்தியாவின் குஜராத் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (ஐ)



## விபத்தில் மாணவன் மரணம்

ஹொரவப்பொத்தானை, மார்ச்.13

ஹொரவப்பொத்தானை - கபுகொல்லேவ பிரதான வீதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் 16 வயது மாணவன் ஒருவர் உயிரிழந்தார்.

பேருந்தும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றது என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் பலத்த காயங்களுடன் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

ஆனாலும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் பேருந்து சாரதியை கைது செய்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# உரிமைக் காணிக்குள் செல்ல இராணுவத்தினர் தடைவிதிப்பு

## வெடிவைத்த கல் கிராம மக்கள் கவலை

வவுனியா, மார்ச்.13

**வவுனியா, வடக்கு நெடுங்கேணி வெடிவைத்தகல் கிராமத்துக்குள் மக்கள் உட்செல்ல இராணு வத்தினரும், வனவளத் திணைக்களத்தினரும் தடைவிதித்துள்ளனர் என கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

இந்தக் கிராமத்தில் யுத்தம் காரணமாக ஏற்பட்ட இடப் பெயர்வின் பின்னர் குடியேற்றங்கள் எதுவும் இல்லை. அப்பகுதியில் போருக்கு முன்னர் சிறுவர் பாடசாலை ஒன்று இருந்தது. அப் பாடசாலையில் வயலுக்குச் செல்பவர்கள் மட்டுமே தங்கியிருந்து வயலுக்குச் செல்வார்கள்.

ஆனால், அப்பகுதிக்குள் உட்செல்வதற்கோ காணிகளைத் துப்புரவு செய்யவோ இராணுவத்தினரும், வனவளத் திணைக்களத்தினரும் தடை விதித்துவருகின்றனர்.

இந்தப் பகுதியில் வசித்த மக்கள் தமது காணிகளுக்கான உறுதி ஆவணங்களை வைத்திருக்கின்ற போதும், வெடிவைத்தகல் கிராமத்தில் இராணுவத்தினர் முகாம் அமைத்து இருப்பதனால் அப்பகுதிக்கு மக்கள் சென்று தமது காணிகளைத் துப்புரவு செய்ய தொடர்ந்தும் தடை விதித்து வருகின்றனர்.

இக் கிராமத்தில் ஆரம்பத்தில் 65 குடும்பங்கள் வசித்து வந்த நிலையில் தற்போது 15 குடும்பத்தினர் மாத்திரமே இக்கிராமத்தில் உள்ள தமது சொந்தக் காணிக்குள் குடியேறுவதற்கு கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளரின் அனுமதி கடிதத்தை இராணுவம், வனவளத்திணைக்களத்தினருக்கு வழங்கியிருந்தும், கிராமத்தில் உள்நுழைவதற்கான அனுமதிப் பத்திரத்துடன் இந்தப் பகுதியிலுள்ள தம் சொந்தக் காணிகளை துப்புரவு செய்ய சென்ற போது இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்.



2015 ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பகுதிக்குள் பொதுமக்கள் உட்செல்ல இராணுவத்தினர் தடை விதித்த நிலையில் இது தொடர்பில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனிடம் முறையீடு செய்த போது, உரிய தீர்வு பெற்றுத் தருவதாக தமக்கு கூறியிருந்தும் இதுவரை எமக்கான நீதி கிடைக்கவில்லை என அக்கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆனாலும், இந்தப் பகுதிக்குள் அம்மன் ஆலயம் இருப்பதனால் வருடா வருடம் வரும் பங்குனித் திங்கள் உற்சவத்தை நடத்துவதற்கு மட்டும் ஆலய வளாகத்தை சுத்தப்படுத்துவதற்கு பல்வேறு நிபந்தனைகளுடன் அப்பகுதி மக்கள் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ)

## அரசியல்வாதிகளின் தேவைகளுக்கு ஏற்ப பாடப்புத்தக விடயங்களை மாற்ற முடியாது

### சரத் வீரசேகரவுக்கு ஹசன் அலி பதில்

கொழும்பு,மார்ச்.13

இஸ்லாமிய பாடப் புத்தகங்களில் காணப்படும் அடிப்படைவாத விடயங்கள் நீக்கப்படும் என்று அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளதைப் போன்று, பாடப்புத்தகங்களில் உள்ள விடயங்களை அரசியல்வாதிகளின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ள முடியாது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவிக்கையில்:

இஸ்லாமிய பாட நூல்களில் எது அடிப்படைவாத விடயம், எது அடிப்படைவாதமற்ற விடயம் என்பதை அரசியல்வாதிகள் தீர்மானிக்க முடியாது. பல்கலைக் கத்தினூடாக இஸ்லாமிய கல்வியியலாளர்கள் அடங்கிய குழுவொன்றை நியமித்து அதனூடாக இவ்விடயம் தொடர்பில் தீர்மானிக்க முடியும்.

அடிப்படைவாதம் என்பது அனைத்து மதங்களிலும் காணப்படுகின்றது. தாம் பின்பற்றும் மதத்தைப் பற்றி முறையாகப் புரிந்து கொள்ளாதவர்களே அடிப்படைவாதிகளாவர். மதங்களைப் பற்றி நன்கு அறிந்து அவற்றைப் பின்பற்றுபவர்கள் அடிப்படைவாதிகளாக இருக்க மாட்டார்கள்.

எனவே, இஸ்லாம் பாட நூல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை அமைச்சர் சரத் வீரசேகர, கூறுவதைப் போன்று அரசாங்கத்தின் தேவைக்காக அல்லது அரசியல் கட்சியொன்றின் தேவைக்காக மாற்ற முடியாது.

இஸ்லாமிய கல்வியியலாளர்கள் அடங்கிய குழுவை நியமித்து இதற்கான தீர்வைக் காணுமாறு வலியுறுத்துகின்றோம்- என்றார். (எ)

## சீனி இறக்குமதியால் ஏற்பட்ட நட்டத்தை ஆராய தடயவியல் கணக்காய்வு மேற்கொள்ள வேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு,மார்ச்.13

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் சீனிக்கு 25 சதம் வரை வரி குறைக்கத் தீர்மானிக்கப்பட்டதால் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கும் நட்டம் தொடர்பில் தடயவியல் கணக்காய்வு மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி, நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷ டி சில்வா தெரிவிக்கையில்:

இறக்குமதி செய்யப்படும் சீனி ஒரு கிலோவுக்கான வரியை 25 சதம் வரை குறைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தால் அரசாங்கத்துக்கு 15.9 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்டிருக்கும் நட்டம் தொடர்பில் தடயவியல் கணக்காய்வு மேற்கொள்ள வேண்டும் என நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றோம்.

சீனி இறக்குமதி செய்வதற்கு ரூபா 25 சதம் வரை வரி குறைக்கப்பட்டதால் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி முதல் கடந்த பெப்ரவரி 20 ஆம் திகதிவரை அரசாங்கத்துக்கு கிடைக்கவிருந்த ஆயிரத்து 600 கோடி ரூபா வருமானம் இல்லாமலாகியிருப்பதாக நிதி தொடர்பான பாராளுமன்ற மேற்பார்வைக்குழுவுக்கு நிதி அமைச்சு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சீனி இறக்குமதி வரிகுறைப்பால் அரசாங்கத்துக்கு 1590 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என நிதி அமைச்சு கணக்கு பார்த்திருக்கின்றபோதும், உண்மையான நட்டத்தை கணக்கு பார்ப்பதற்காக தடயவியல் கணக்காய்வு ஒன்றை மேற்கொள்ளுமாறு கேட்டிருக்கின்றோம்.

அத்துடன் சீனி இறக்குமதியால் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கும் நட்டம் தொடர்பில் பாராளுமன்றில் விவாதம் ஒன்றையும் நாங்கள் கோரவிருக்கின்றோம். அத்துடன் இந்த வரி திருத்தத்தை மேற்கொள்ளுமாறும் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம்- என்றார். (எ)



## இராகலை தோட்டத்தில் தீ விபத்து 16 குடியிருப்புக்கள் முற்றாக தீக்கிரை

இராகலை,மார்ச்.13

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராகலை தோட்டம் 2 ஆம் பிரிவில் 16 வீடுகளைக் கொண்ட நெடுங்குடியிருப்பில் நேற்று அதிகாலை 3.45 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 16 வீடுகள் முற்றாக எரிந்து தீக்கிரையாகின.

இந்த வீடுகளில் குடியிருந்த 14 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஆண்கள் 26 பேரும், பெண்கள் 32 பேரும், 5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 3 பேரும் அடங்குகின்றனர்.

இந்தத் தோட்டத்தில் முதலாம் இலக்க நெருங்குடியிருப்பிலேயே தீ விபத்து ஏற்பட்டது.

இதனையடுத்து, பொலிஸாருக்கும், தீயணைப்புப் பிரிவினருக்கும் தகவல் வழங்கப்பட்டது. இந்நிலையில், சம்பவ இடத்துக்கு விரைந்த நுவரெலியா மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர், மக்களுடன் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினர்.

அப்பகுதியில் மக்கள் குவிந்ததால், சமூக இடைவெளியைப் பின்பற்றி உரியவகையில் செயல்படுமாறு பொலிஸாரால் அறிவிக்கப்பட்டது.

இத்தீவிபத்தால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படாதபோதிலும், பெருமளவில் பொருள் சேதம் ஏற்பட்டுள்ளது. வீட்டு உபகரணங்கள், முக்கிய ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப்புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன என்று மக்கள் தெரிவித்தனர். ஒரு சில பொருட்களை மாத்திரமே மக்களால் பாதுகாக்கக் கூடியதாக இருந்தது.

இவர்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தோட்ட ஆலயத்தில் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை. இராகலை பொலிஸார், நுவரெலியா பொலிஸ் கைரேகை அடையாளப்பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

சிறப்பு சலுகை
ஆரோக்கியா பல் வைத்தியசாலையில்
வழங்கப்படும் பல் வைத்திய சேவைகளுக்கான ஆரம்பகால கட்டண சலுகைகளைப் பெற்றுக்கொள்ள
இன்றே விரைந்திடுவீர்
AAROKYA DENTAL CARE
Petrol Shed Lane,Nelliyady.
074070 2241, 0759759828

## இதுவும் நடந்தது!

யுத்தம் முடிந்து சில மாதங்கள்தான் ஆகியிருக்கும். நமது ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவரும் அப்போதைய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் ஒரு பரபரப்பான தகவலை வெளியிட்டிருந்தார். முல்லைத்தீவில் பாரிய இராணுவக் குடியிருப்பு ஒன்று அமைக்கப்படுவதாகவும், இராணுவத்தினரை குடும்பத்துடன் குடியேற்ற அப்போதைய ராஜபக்ஷ அரசு திட்டமிடுவதாகவும் அவர் தெரிவித்தபோது அதில் உண்மை இல்லாமல் இருக்காது என்றே அனைவரும் நம்பினார்கள்.

அவர் ஒரு முக்கிய தலைவர். தமிழ் மக்களின் தலைமையை அப்போது தம்வசம் வைத்திருந்த கூட்டமைப்பின் முக்கிய தலைவர். அவர் ஆதாரம் இல்லாமல் சொல்ல மாட்டார் என்றே அனைவரும் நம்பினார்கள். ஆனால், இன்றுவரை அந்தக் குடியிருப்பைக் காணவில்லை. இதற்காக இராணுவ விஸ்தரிப்பு நடக்கவில்லை என்று இந்த ஊர்க்குருவி வாதிடப்போவதில்லை.

கடந்த வாரம் அமெரிக்காவின் தன்னார்வ நிறுவனம் ஒன்று வெளியிட்ட சில தகவல்களை நமது ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன. வலிகாமம் பகுதியில் மாத்திரம் 33,000 ஏக்கர் தனியார் காணிகளை இராணுவம் யுத்தம் முடிவடைந்து 12 வருடங்களாகியும் விடுவிக்கவில்லை என்று அமெரிக்காவிலிருந்து இயங்கும் ஒரு தன்னார்வ நிறுவனம் அறிக்கை வெளியிடுகின்றது. ஆனால், இங்கே அரசியல் செய்யும் நமது தலைவர்கள் அந்த அறிக்கையை மேற்கோள் காட்டித்தான் கதைக்கவேண்டியிருக்கின்றது.

யுத்தம் முடிவடைந்து இத்தனை வருடங்களின் பின்னரும் எத்தனை மக்கள் இறுதி யுத்ததில் கொல்லப்பட்டார்கள் என்பது யாரிடமும் இல்லை. யாரிடமும் இல்லை என்பது, அதிகாரபூர்வமாக - அல்லது இன்றைய உலக ஒழுங்கு ஏற்றுக் கொள்ளக்கூடியவாறு இல்லை. சாதாரணமாக ஒவ்வொரு குடும்பங்களிடமும் குடும்ப அட்டை என்ற ஒன்று உண்டு. அவை ஒவ்வொரு கிராமசேவகரிடமும் அல்லது பிரதேச செயலரிடமும் உண்டு. யுத்தத்திற்கு முன்னர் இருந்த குடும்ப அட்டைகளையும் இப்போதிருக்கின்ற குடும்ப அட்டைகளையும் சரிபார்த்தால் காணாமல் போனவர்களை ஓரளவு துல்லியமாக கண்டுபிடித்திருக்கலாம். அதனை அதிகாரத்தை வைத்திருந்த பிரதேச சபைகளோ அல்லது மாகாண சபையோ செய்திருக்கலாம்.

இப்படி ஒரு கணக்கெடுப்பை செய்து வைத்திருந்துகொண்டு நாம் பேசினால் அது இன்றைய உலக ஒழுங்கில் 'விஞ்ஞான பூர்வமான' தகவலாக இருந்திருக்கும்.

நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் கலந்துரையாடல் ஒன்றில் பேசிய சுரேஷ் பிறேமச்சந்திரன் ஒரு முக்கிய தகவலைத் தெரிவித்திருந்தார்.

'2008 முதல் மே 2009 வரை நடைபெற்ற இறுதி ஆறு அல்லது ஏழு மாத கால இன அழிப்பு போரில் வன்னியில் மட்டும் 146, 679 இற்கு மேற்பட்ட மக்களுக்கு என்ன நடந்தது என்பதற்கு தகவல் இல்லை.

நிறுவனப்படுத்தப்பட்ட கொடுமைபடுத்தும் முகாம்களும், இராணுவ முகாம்களுக்கு அருகில் கொலைக்களமும் உள்ளன'

ஐ. நாவின் முக்கிய கலந்துரையாடலில் அவர் தெரிவித்த தகவல் இது. இதுவரை காலமும் ஒவ்வொருவரும் தத்தமக்கு வாயில் வந்ததைப்போல சொல்லிக்கொண்டிருக்க, சுரேஷ் 146, 679இற்கு மேற்பட்ட மக்கள் என்கிறார். அதாவது 146, 679 பேரின் விபரங்கள் அவரிடம் இருக்கின்றது. விபரங்கள் இல்லாதவர்களை மேற்பட்ட என்று சொல்கிறார் என்றே இந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த பிரதிநிதிகள் நினைத்திருப்பார்கள்.

இந்தத் தகவல்களை அவர் மற்றவர்களுடனும் பகிர்ந்து கொள்ளவேண்டும். இல்லையெனில் இராணுவக் குடியிருப்புக் கதைபோல இதுகும் ஆகிவிடும்!

**- ஊர்க்குருவி.**

# ஆசிய நாடுகளின் ஆதரவு இலங்கைக்கு கிடைக்கும்

## அமைச்சர் தினேஷ் நம்பிக்கை



கொழும்பு, மார்ச் 13

**இலங்கை குறித்த திருத்தப்பட்ட பிரேரணை உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடல்களுக்காக நேற்று வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்ட அதேவேளையில், ஆசிய பிராந்திய நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தமக்கு ஆதரவளிக்கும் என தான் நம்புவதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்திருக்கின்றார்.**

இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இவ்விடயத்தில் தமது நிலைப்பாடு என்ன என்பதையிட்டு இது வரையில் வெளிப்படுத்தவில்லை எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை அவை கொண்டிருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

பிரேரணையின் இறுதி வடிவம் வெளிவரும் வரையில் நாம் பொறுத்திருக்க வேண்டும். பிரேரணையில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றது அதன் உள்ளடக்கம் என்ன என்பதன் அடிப்படையிலேயே அந்த நாடுகளின் நிலைப்பாடு இருக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆசிய நாடுகள் பலவற்றின் பிரதிநிதிகளை தான் சந்தித்து இது தொடர்பாகப் பேசியிருப்பதாகவும் தெரிவித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, அவர்கள் யாருமே தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை எனவும் கூறினார்.

# குண்டர்களைக் கொண்டு நிர்வாகத்தை நடத்தினால் நாட்டுக்கு எதிர்காலம் இல்லை!

## எச்சரிக்கின்றார் கரு ஜயசூரிய

கொழும்பு, மார்ச் 13

அரசாங்கம் தமது நிர்வாகத்தை குண்டர்களை கொண்டு நடத்தினால் நாட்டுக்கு எதிர்காலம் இல்லாது போய்விடும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரசாங்க அதிகாரிகளின் அனைத்து விடயங்களிலும் அரசியல் தலையீடு காணப்படுவதான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. இது முறையற்ற விடயமாகும். இதனை நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கைளை முன்வைத்துள்ளோம். அரசங்கம் நிர்வாகத்தை குண்டர்களால் நிர்வகிப்பார்களாயின் நாட்டிற்கு எதிர்காலமென்ற ஒன்று இல்லாது போய்விடும். ஆகவே குறித்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டியது அவசியமான விடயமாகும். அரச அதிகாரிகள் தமது கௌரவத்தை பேணிக்கொண்டு தமது பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றுவார்களாயின் இந்த பிரச்சினை இடம் பெறாது.

அத்துடன், ஜனாதிபதி சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அதிக அக்கறை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்நிலையில் இரண்டு பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஏனெனில் புவனேகபாகு மன்னுடைய மண்டபம் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் அரசியல் தலையீட்டின் காரணமாக அந்த இடம் சேதத்திற்கு உள்ளாகியுள்ளது. இது தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் உரிய நடவடிக்கைகள் இன்னமும் கூட இல்லை. அவ்வாறாயின் ஒரே நாடு ஒரே சட்டம் எங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றிற்கு நாடு என்ற வகையில் வெட்கமடைய வேண்டும். எமது நாட்டில் சுயாதீனமான நீதிமன்றம் கட்டமைப்பு காணப்பட்டது. ஆனால் தற்போது நீதித்துறை கட்டமைப்பிற்குள் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. அவ்வாறாயின் எவ்வாறு நாட்டினுடைய செயற்பாடுகளை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும்." ஏன்றார்.

# வடக்கு சுகாதார தொண்டர்களின் உணவு தவிர்ப்பு முடிவுக்கு வந்தது!

## சாத்வீக போராட்டம் தொடரும்

யாழ்ப்பாணம், மார்ச் 13

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் சுகாதார தொண்டர்களின் உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது. எனினும் அவர்களின் போராட்டம் சாத்வீக வழியில் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவின் யாழ். மாவட்ட பிரிவினர் போராட்டக்காரர்களுக்கு அளித்த உறுதியை அடுத்தே உண்ணாவிரத போராட்டம் முடிவுக்கு வந்ததாக அந்தக் கட்சியினர் அறிவித்துள்ளனர்.

தமக்கு வழங்கப்பட்ட நியமனத்தை இடைநிறுத்தி நீண்ட காலமாகின்ற போதிலும் நியமனம் வழங்கப்படாதமையைக் கண்டித்து சுகாதார தொண்டர்கள் கடந்த 12 நாட்களாக வடக்கு ஆளுநர் செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் கடந்த 4 நாட்களாக அவர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், பொதுஜன பெரமுன கட்சியின் யாழ். மாநகர அமைப்பாளர் வி.எஸ்.பி. பிரசாந், சாவகச்சேரி அமைப்பாளர் சர்வா ஆகியோர் போராட்டக்காரர்களை சந்தித்துப் பேசினர் என்று கூறப்படுகின்றது.

இதைத் தொடர்ந்து அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரும் அமைச்சர்களுடன் பேசி இதற்கு முடிவு பெற்றுத் தருவோம் என்று உறுதியளித்தனர். இதைத் தொடர்ந்து அவர்களுக்கு தண்ணீர் வழங்கி உணவு தவிர்ப்பு போராட்டத்தை அவர்கள் முடிவுறுத்தினர் என்று கூறப்பட்டது. எனினும், தமக்கு நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்று அவர்கள் தெரிவித்தனர் என்றும் கூறப்பட்டது. (ஐ)




**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**

12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

ஈழநாடு
Eelanadu

# நாட்டில் 150 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

## ராஜித எம்.பி. குற்றச்சாட்டு



**கொழும்பு, மார்ச் 13**

**நாட்டில் 150 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் பல வகை நோய்களுக்கு உள்ளானவர்கள் இறக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், இன்று அரச வைத்தியசாலைகளில் பெருமளவு மருந்துகளுக்கு தட்டுப்பாடுகள் நிலவுகின்றன. இதனால் பலவகை நோய்களால் பாதிக்கப்பட்ட வறிய மக்கள் மிகுந்த சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். வசதி உள்ளவர்களால் இதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியுமாக இருந்தாலும் தொடராக பல நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் தமது மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் அவர்கள் இறக்கும் நிலையும் ஏற்படுகின்றது. அரச வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துகளைப் பெற்றுக் கொள்ள அரசாங்கத்திடம் நிதி இல்லை.

இலவச மருத்துவத்திற்கு பெயர் போன நாட்டின் நன்மதிப்பை இந்த அரசாங்கம் பாதுகாக்க வேண்டும். தேசப்பற்று அரசாங்கம் என்று கூறி மார் தட்டிக் கொள்ளும் இந்த அரசாங்கம் பொது மக்கள் நலன் சார்ந்து கடந்து ஒன்றரை வருடங்களில் எந்தத் திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை. இன்று 150 வகையான மாத்திரை மற்றும் மருந்துகளுக்கு தட்டுப்பாடுகள் நாட்டில் உள்ளன - என்றும் அவர் தெரிவித்தார்.

# தீர்க்கமான முடிவு ஒன்றை எடுத்து எமது பக்கம் இந்தியா செயல்படும்!

## எஸ்.பி.திஸநாயக்க நம்பிக்கை

"இந்தியாவின் நிலைப்பாடு எமக்கு இன்னும் தெளிவற்ற நிலையில் காணப்படுகின்றது. இந்திய அரசாங்கம் தீர்க்கமான முடிவொன்றை எடுத்து எமது பக்கமாக செயற்படும் என நம்புகின்றோம்" - என்று எஸ்.பி.திஸநாயக்க கூறியிருக்கிறார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "ஜெனிவாவில் எமக்கு எதிராகக் கொண்டு வரப்படும் தீர்மானத்தை முறியடிக்க சீனா, ரஷ்யா, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், கியூபா ஆகிய நாடுகள் செயல்படுகின்றன. இந்திய அரசு இலங்கையின் இறையாண்மை, வடக்கில் தமிழ் மக்களின் உரிமைகள், 13ஆவது திருத்த அமுல் விவகாரத்தை பார்க்கின்றது. இந்தியாவின் நிலைப்பாடு எமக்கு இன்னும் தெளிவற்ற நிலையில் காணப்படுகின்றது. இந்திய அரசாங்கம் தீர்க்கமான முடிவொன்றை எடுத்து எமது பக்கமாக செயல்படும் என நம்புகின்றோம் - என்றார்.

# தடுப்பூசி பெற்றோர் நாடு திரும்பும்போது தனிமைப்படுத்துவது அவசியமற்றது!

## வலியுறுத்துகின்றார் மனோ கணேசன்!!

*கொழும்பு, மார்ச் 13*

தாம் வாழ்ந்த நாட்டில் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று, நாடு திரும்பும் இலங்கையர்களை 14 நாள் கட்டாய தனிமைக்காக, அரசு நடத்தும் நிலையங்களுக்கோ அல்லது சொந்த நிதியை செலுத்த சொல்லி நட்சத்திர விடுதிகளுக்கோ அனுப்பப்படக்கூடாது. இந்த நடைமுறையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அவர்களது சொந்த வீடுகளில் சுயதனிமைக்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

இந்த யோசனை பற்றி கொவிட் தடுப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேவிடம் வினவிய போது, இன்னமும் இதுபற்றி இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என நேற்று பாராளுமன்றத்தில் அவர் என்னிடம் தெரிவித்தார் என்று மனோ கணேசன் எம். பி. தெரிவித்துள்ளார்.

மேலும், "தொழில்காரணமாகவோ அல்லது விடுமுறை நோக்கிலோ வெளிநாடு சென்றுள்ள இலங்கையர், தாம் இன்று வாழும் நாட்டில் தடுப்பூசிகள் இரண்டையும் பெற்று இருப்பார்கள் எனில், அவர்கள் தாய்நாடு திரும்பும் போது, அவர்களை தமது சொந்த வீடுகளிலேயே சுய தனிமைக்கு உள்ளாக்க வேண்டும்.

ஐந்து, மூன்று நட்சத்திர விடுதிகளில் தங்க வைப்பது, அதற்கான கட்டண நிர்ணயம், வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பும் விமான பயணசீட்டு கட்டணம் ஆகியவவை தொடர்பில் பெரும் திட்டமிட்ட முறைகேடுகள் நடைபெறுகின்றன. இதுபோல், அரசு நடத்தும் நிலையங்களிலும் முறைகேடுகள் இடம்பெறுகின்றன எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனால், வெளிநாடு சென்று உழைத்து அதன் மூலம் இந்நாட்டுக்கு அந்நிய செலவாணியை பெற்று தந்து, இன்று தொழில் இழந்து, பெரும் பொருளாதார சிக்கல்களில் மாட்டி இருக்கும் நம் நாட்டு மக்கள் பெரும் அவதியில் தள்ளப்பட்டுள்ளனர்.

நோயுற்றவர்கள் உடனடியாக வைத்திய நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். ஏனையோர் சொந்த வீடுகளில், கண்காணிப்பின் கீழ் சுய தனி மைக்கு உள்ளாகப்பட வேண்டும். உல கின்பல நாடுகளில் இந்த முறை இப்போது அமுலுக்கு வந்துள்ளது.

எனது இந்த யோசனைபற்றி கொவிட் தடுப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபிள்ளையிடம் வினவிய போது, இதுபற்றி, இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என அவர் நேற்று பாராளுமன்றத்தில் என்னிடம் தெரிவித்தார்

எது எப்படி இருந்தாலும், நம் நாட்டு அப்பாவி மக்களின் நிர்க்கதி நிலைமையை பயன்படுத்தி பணம் பண்ணும் கோஷ்டிகளுக்கு இடம் அளிக்கும் முறையில் அரசின் சட்ட திட்ட விதி முறைகள் ஒரு போதும் அமைய கூடாது."

NEC
A/L 2023
புதிய பிரிவுகள்
ஆரம்பம் 2021.03.12 வெள்ளி
காலை 9 மணி
வணிகக்கல்வி
S.K.பாலசபேஷ்
அலுவலக தொடர்பு - 0703396696

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 13312 \| வே \| 1983<br>குரும்பசிட்டி \| இந்து \| செவ் : 08<br>Software Engineer \| Germany<br>மகம்(சிம்மம்) \| 174செ.மீ | 13172 \| வே \| 1984<br>இணுவில் \| இந்து \|<br>Area Inspector \| Sri lanka \|<br>ஆய்யிலியம்(கடகம்) \| 160செ.மீ |
| 13500 \| வே \| 1984<br>வல்வெட்டி \| இந்து \| UK \|<br>Working in shop \| லக்.செவ்<br>திருவோணம்(மகரம்) \| 165செ.மீ | 13130 \| வே \| 1985<br>Divorced \| யாழ்நகரம் \| இந்து<br>Sri Lanka \| N/A<br>உத்திரட்டாதி(மீனம்) \| 163செ.மீ |
| 13900 \| வே \| 1984<br>அரியாலை \| இந்து \| செவ் : 02<br>It Company \| Australia<br>அனுஷம்(விருச்சிகம்) \| 155செ.மீ | 13822 \| ப \| 1987<br>பொலிகண்டி \| இந்து \| Switzerland<br>பூராடம்(தனுசு) \| 160செ.மீ<br>Assistant Auditor \| செவ் : 01 |
| 13858 \| வே \| 1984<br>கந்தர்மடம் \| இந்து<br>Senior Network Engineeer<br>Singapore \| கேட்டை (விருச்சிகம்)<br>155செ.மீ | 13476 \| வே \| 1987<br>தெல்லிப்பளை \| இந்து \|<br>Marine Officer \| Sri Lanka \|<br>மூலம்(தனுசு) \| 168செ.மீ |
| 13115 \| வே \| 1984<br>கந்தர்மடம் \| இந்து \|<br>Software Engineer \| Sri Lanka \|<br>சுவாதி(துலாம்) \| 168செ.மீ | 13970 \| வே \| 1987<br>Divorced \| சுழிபுரம் \| இந்து<br>Researcher \| Oman<br>ஆ.செவ் : 09 \| 153செ.மீ<br>ஆய்யிலியம்(கடகம்) |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

DHL உள்நாடு, வெளிநாடுகளுக்கான
விரைவு பொதிகள் சேவை
உள்நாடு யாழ். - கொழு. கொழு. - யாழ். 12 மணித்தியாலங்களில் ஒப்படைக்கப்படும்
வெளிநாடு 3 - 5 நாட்களில் ஒப்படைக்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது)
Lanka Cargo Worldwide Express
315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 283 2397 / 076 485 4092

விசேட விலையில் மடிக்கணனி
Laptop
4GB Ram
1 TB HDD
Windows 10
HP i3
Free Bag கையிருப்பு உள்ளவரை
St.Antonys Computer
189, K.K.S Road, Jaffna Town, Jaffna.
021 222 4865 / 075 069 8608

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK




11.00 மணி : மைதானம் - வாராந்த விளையாட்டு நிகழ்வுகளின் தொகுப்பு




12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை
**இரவு**
7.00 மணி : சுப்பர் குறுாப்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்




10.00 மணி : யாவரும் கேளீர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டைடைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
**பகல்**
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வீரகத்தி விநாயகர் கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் பருத்தித்துறை சிவன் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வீரகத்தி விநாயகர் கோவில் திருவிழா

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித மிக்கேல் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : பாடல்
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : இஸ்லாமிய உலகம் (மறு ஒளிபரப்பு)
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.